




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 207 10.03.2026 செவ்வாய்க்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 207 ▸▸Tuesday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(10–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–26
பிறை: தேய்பிறை
திதி
சப்தமி பின்னிரவு 2.02 வரை
பிறகு அஷ்டமி
நட்சத்திரம்:
அனுஷம் இரவு 7.16 வரை
பிறகு கேட்டை
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி.
எமகண்டம்
காலை 9.00 – 10.30 மணி.
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி.

மேஷம் .................... நலம்
ரிஷபம் .................. நன்மை
மிதுனம் ........... நற்செயல்
கடகம் .................. தாமதம்
சிம்மம் ................. ஆர்வம்
கன்னி ................. சாந்தம்
துலாம் ...................... வரவு
விருச்சிகம் ......... உழைப்பு
தனுசு ...................... வெற்றி
மகரம் .................. இன்பம்
கும்பம் ................ விவேகம்
மீனம் ................... இரக்கம்

# ஈரான் மீதான அமெரிக்க தாக்குதல் தீவிரம்: எண்ணெய் கிடங்குகள் மீது குண்டுகள் வீச்சு

## சாலைகளில் ஆறாக ஓடிய கச்சா எண்ணெய் தீப்பற்றி எரிந்ததால் மக்கள் பீதி

**வாஷிங்டன்/ டெஹ்ரான், மார்ச் 10:**

அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் 9-வது நாளை எட்டியுள்ளது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் மற்றும் அதன் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி வந்தன. இதற்குபதில் கொடுக்கும் விதமாகவும், ஈரானின் பொருளாதார வலிமையை குறைக்கும் நோக்கிலும் அதன் எண்ணெய் வளங்கள் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன.



சாலைகளில்ஓடும்எண்ணெய்: குறிப்பாக, டெஹ்ரானில் உள்ள 4 எண்ணெய் கிடங்குகள் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில், கச்சா எண்ணெய் வெளியேறி, சாலைகளில் ஆறாக ஓடித் தீப்பிடித்தது. இதனால், பொதுமக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டது. இந்த தாக்குதலில் 4 லாரி ஓட்டுநர்கள் உயிரிழந்தனர். அதேபோல, லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர்.

செயற்கைக்கோள் புகைப்படங்களின்படி, ஈரானில் பல எண்ணெய் கிடங்குகள் தீப்பற்றி எரிவதால், விண்ணை முட்டும் அளவுக்கு கரும்புகை எழுந்துள்ளது. இதனால், அப்பகுதியே இருளில் மூழ்கியுள்ளதுடன், சுற்றுச்சூழலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்ட தகவல்களின்படி, பாதுகாப்புப் பணியில் இருந்த ஈரானிய வீரர்கள் மற்றும் பணியாளர்கள் என 50-க்கும் மேற்பட்டோர் இந்த தாக்குதலின்போது உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதற்கு பதில் கொடுக்கும் விதமாக, குவைத்தில் உள்ள அமெரிக்க விமான தளத்தின் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில், அமெரிக்க ஹெலிகாப்டர் பழுதுபார்க்கும் மையங்கள் சேதமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலையும் ஈரான் தீவிரப்படுத்தி வருகிறது.

ட்ரம்ப் விலை தரவேண்டும்: இதற்கிடையே, ஈரான் நாட்டின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்த விவகாரத்தில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து ஈரானின் பாதுகாப்பு தலைவரும், காமேனியின் முதன்மை ஆலோசகருமான அலி லாரி ஜானி கூறியதாவது: எங்களது உச்ச தலைவர் காமேனி மற்றும் 1,000-க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்ததை சாதாரண விஷயமாக கடந்து செல்லமுடியாது. எங்கள் உச்ச தலைவர் சிந்திய ரத்தத்துக்கு பழிவாங்குவோம். இதற்கான விலையை அமெரிக்க அதிபர் டிரம்ப் கொடுத்தே தீர வேண்டும்.

வெனிசுலாவில் நடந்தது போல ஈரானிலும் நடக்கும் என ட்ரம்ப் தப்புக் கணக்கு போட்டுவிட்டார். அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடிபணியமாட்டோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

'ராணுவ நடவடிக்கை தொடரும்'- ஈரானின் இந்த எச்சரிக்கையை அமெரிக்க அதிபர் டிரம்ப் முற்றிலுமாக நிராகரித்துள்ளார். ஈரான்மீதான ராணுவ நடவடிக்கை தொடரும் என தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சிபிஎஸ் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: அலி லாரிஜானி என்பவர் யார் என்றே எனக்குத் தெரியாது.

பின்னர் அவர் பேசுவதை ஏன்நான் ஒரு பொருட்டாக மதிக்கவேண்டும். எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கும், சர்வதேச அமைதிக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் எந்த ஒரு சக்தியையும் நாங்கள் சகித்துக்கொள்ள மாட்டோம். ஈரான் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டுவிட்டது. எனவே, அந்த நாடு நிபந்தனையற்ற சரணாகதி அடைய வேண்டும். அதுவரை அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகள் தொடரும். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் புதிய தலைவர் தேர்வு: இதற்கிடையே, அயதுல்லா அலி காமேனி உயிரிழந்ததை தொடர்ந்து, ஈரானின் அடுத்த உச்ச தலைவர் யார் என்பது தேர்வு செய்யப்பட்டுவிட்டதாகவும், பாதுகாப்பு கருதி, அவரது பெயர் உள்ளிட்ட விவரங்களை வெளியிடாமல் ஈரான் அரசு ரகசியம் காப்பதாகவும் கூறப்படுகிறது.

## ஈரானின் புதிய உச்ச தலைவராக மொஜ்தபா காமேனி அறிவிப்பு



அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததால் ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்து போர் தொடுத்துள்ளன. இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். மேலும் ராணுவ தளபதிகள் உள்பட உயர் அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

ஒரு வாரத்துக்கு மேலாக ஈரானில் போரிட்டு வரும் அமெரிக்கா - இஸ்ரேல் படைகள், தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட பல்வேறு நகரங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரான் மீது வலிமையான தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், ஆயுதங்களை கைவிட்டு சரணடைய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக அடுத்த 6 மாதங்களுக்கு தொடர்ந்து தீவிரமாக போர் புரியும் வலிமை எங்களுக்கு இருக்கிறது என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஈரானின் புதிய உச்ச தலைவரை தேர்வு செய்வதற்காக மதகுருமார் கவுன்சில் ஆலோசனை நடத்தியது. இந்த நிலையில், ஈரானின் புதிய உச்ச தலைவராக அயதுல்லா காமேனியின் மகன் மொஜ்தபா காமேனி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## பஞ்சாப்: 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.1,000!

**சண்டீகர், மார்ச் 10:**

பஞ்சாப் சட்டப்பேரவையில் ஆம் ஆத்மி கட்சி தலைமையிலான அரசு 2026-27-ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்தது.

மாநில நிதியமைச்சர் ஹார்பல்சிங் சீமா தாக்கல் செய்த இந்த பட்ஜெட்டில், மகளிருக்கு மாதந்தோறும் உதவித்தொகை அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், மாதந்தோறும் பொதுப் பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு ரூ.1,000, பட்டியலினப் பெண்களுக்கு ரூ.1,500 உதவித்தொகை அளிக்கப்பட உள்ளது.

இதற்காக பட்ஜெட்டில் ரூ.9,300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநில தலைநகர் சண்டீகரில் முதல்வர் பகவந்த் மான் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வைசாகி பண்டிகை முதல் உதவித்தொகை திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை தொடங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் பயனடைய முடியும் என்றார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலின்போது இந்தத் திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாக ஆம் ஆத்மி அளித்தது. அக்கட்சி ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகளாகியுள்ள நிலையில், தற்போது இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இந்தத் திட்டம் தொடங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் ரூ.33,500 கோடி மதிப்பில் திட்டங்கள்: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

**புதுடெல்லி, மார்ச் 10:**

டெல்லி யூனியன் பிரதேசத்தில் ரூ.33,500 கோடி மதிப்பிலான திட்டங்களை, பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.





தலைநகர் டெல்லியில் சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, ஊதா, இளஞ்சிவப்பு (பிங்க்), மெஜந்தா உள்ளிட்ட பெயர்களில் 10-க்கும் மேற்பட்ட வழித் தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இதில் பிங்க் மற்றும் மெஜந்தா வழித் தடங்கள் இணைக்கப்பட்டு நாட்டின் முதல் வட்ட மெட்ரோ பாதை (ரிங் மெட்ரோ) அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி பிங்க் வழித்தடத்தில் 12.3 கி.மீ. நீள மஜ்லிஸ் பார்க் - உஜ்பூர் - பாபர்பூர் பாதை, மெஜந்தா வழித் தடத்தில் 9.9 கி.மீ. நீள தீபாளி சவுக் - மஜ்லிஸ் பார்க் பாதையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். மேலும் 3 புதிய மெட்ரோ வழித் தடங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

டெல்லி சரோஜினி நகர், நேதாஜி நகர் உள்ளிட்ட பகுதிகளில் அரசு ஊழியர்களுக்காக ரூ.15,200 கோடி மதிப்பில் 9,350 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகளின் சாவிகளை பயனாளிகளிடம் பிரதமர் மோடி வழங்கினார். ஒட்டுமொத்தமாக ரூ.33,500 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார், சில திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

டெல்லி விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: இந்திய பெண்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல், ஆட்சி நிர்வாகம், அறிவியல், விளையாட்டு, சமூக சேவை என அனைத்து துறைகளிலும் இந்தியப் பெண்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றனர். டெல்லியை சர்வதேச நகரமாக உருவாக்க வேண்டும். இதற்காக டெல்லியின் உள்கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக டெல்லி மெட்ரோ சேவை, 375 கி.மீ. ஆக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் முதல் ரிங் மெட்ரோ சேவை தொடங்கப்பட்டிருக்கிறது. டெல்லியில் நமோ பாரத் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் டெல்லியில் 1,800 மின்சார பஸ்கள் அறிமுகம் செய்யப்பட்டன. டெல்லி சுற்றுவட்ட சாலையால் போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளது. யமுனை நதியை தூய்மைப்படுத்தும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இரட்டை இன்ஜின் அரசால் டெல்லியில் வளர்ச்சி திட்டப் பணிகள் விரைவு பெற்றுள்ளன.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களால் நாடு முழுவதும் ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் பலன் அடைந்து வருகின்றனர். சுமார் 2 லட்சம் நடைபாதை வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10 கோடி பெண்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 3 கோடி லட்சாதிபதி பெண்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. புதிய இந்தியாவை உருவாக்கி வருகிறோம். நமது நாட்டை முன்னேற்ற பாதையில் அழைத்துச் செல்ல அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மே.வங்கத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும்: டெல்லி விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: மேற்கு வங்கத்தில் நடந்த பழங்குடியினர் மாநாட்டில் பங்கேற்க சென்ற குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை அம்மாநில அரசு அவமதித்து உள்ளது. இதன் மூலம் நாட்டின் அரசியலமைப்பு சட்டம் அவமதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஒவ்வொரு பெண்களும் அவமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்கத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆணவத்துடன் செயல்படுகின்றனர். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள். மேற்கு வங்கத்தில் நிச்சயமாக ஆட்சி மாற்றம் ஏற்படும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## தமிழக பொறுப்பு ஆளுநராக ஆர்.வி. ஆர்லேகர் மார்ச் 12-இல் பதவியேற்பு!

**புதுடெல்லி, மார்ச் 10:**



தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என். ரவி, மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து, கேரள ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர் தமிழக ஆளுநர் பொறுப்பையும்கூடுதலாக கவனிப்பார் என கடந்த மார்ச் 5-ஆம் தேதி குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார்.

இதை முன்னிட்டு ஆர்.வி.ஆர்லேகர் வரும் 11-ஆம் தேதி சென்னைக்கு வருகிறார். அதே நாளில் கடந்த நாலரை ஆண்டுகளாக தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி, தமிழக ஆளுநர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு கொல்கத்தாவுக்கு புறப்பட்டுச் செல்கிறார். அவரை ஆளுநர் மாளிகை அதிகாரிகளும், ஊழியர்களும் வழியனுப்பி வைக்கின்றனர்.

தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்கும் ஆர்.வி.ஆர்லேகர் மார்ச் 12-ஆம் தேதி முற்பகல் சுமார் 12 மணியளவில் பதவியேற்கிறார். உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி அவருக்கு பதவிப் பிரமானம் செய்துவைக்கிறார். இந்தப் பதவி ஏற்பு நிகழ்வு எளிமையாக நடைபெற உள்ளது.




## ஆதி கேசவ பெருமாள் கோவில் கறுதாசேவை



சென்னை மேற்கு மாம்பலம் ஆதி கேசவ பெருமாள் கோவில் கறுதாசேவை நிகழ்வு.

## "நிகழ்வுகளின் பூ.மாலை" நூல் வெளியீடு




**நெல்லை, மார்ச் 10:** தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நடைபெற்றுவரும் திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தில் நெல்லை மாவட்டம் கவிஞர் பேரா நடத்திய 30-வார நிகழ்வுகளையும் தொகுத்து "நிகழ்வுகளின் பூ.மாலை"என்ற தலைப்பிட்ட நூல் 07.03.2026 மாலையில் பாளையங்கோட்டையில் கவிஞர் பேரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டது.

நெல்லை மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் பெ.இளங்கோ வெளியிட,முதல் படியை அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் பா.ஜென்சி பெற்றுக்கொண்டார்.

மாநிலத்திலேயே முதன் முதலாக நிகழ்ச்சிகளை முடித்ததோடு, அதனை ஆவணமாக மிகக்குறைந்த நாளில் நூலாக அச்சிட்டு வெளியிட்டு அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார் கவிஞர் பேரா.

## காமராஜர் சிலைக்கு மாலை



வடசென்னை மாவட்டம் ஆர்கே நகர் தொகுதி 41வது வட்டம் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து வடசென்னை மாவட்ட துணைத் தலைவர் சண்முகம் தலித் முருகேசன்

## ஆம்பூர் அருகே காரில் பிணம் மீட்பு- சென்னை தனியார் நிறுவன ஊழியர் மர்ம மரணம்

**ஆம்பூர், மார்ச் 10:** சென்னை பழவந்தாங்கள் பகுதியை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவரது மகன் சிவபூசணம் (வயது48) . இவர் இன்று காலை ஆம்பூர் அடுத்த தேவலாபும் ஊராட்சி எட்டியம்மமன் கோவில் தெருவில் நிறுத்தி வைத்திருந்த காரில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த உமராபாத் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். தொடர்ந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆம்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.


அதில் வெங்கடசமுத்திரம் ஊராட்சி ரங்காபுரம் பகுதியை சேர்ந்த காஞ்சனா என்ற பெண்ணை 11 ஆண்டு முன்பு திருமணம் செய்து கொண்டு



சென்னையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வந்ததும், தற்போது ஆம்பூரில் கணவன்- மனைவி பைபாஸ் சாலையின் அருகே உள்ள ஒரு குடியிருப்பில் வசித்து வந்ததும் தெரியவந்தது. மேலும், கடந்த 3-நாட்களுக்கு முன்பு தேவலாபுரம் பகுதியில் தங்கும் விடுதியில் தங்கியிருந்து நேற்று மாலை அறையை காலி செய்து வெளியே சென்றதும் தெரியவந்தது. தொடர்ந்து வழக்குப்பதிவு செய்த போலீசார் சிவபூசணம் இறப்பிற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நம்மாழ்வார் தமிழ் ஸ்ரீ மாசி பிரம்மோற்சவம்





ஸ்ரீ ஆழ்வார் திருநாகரி ஸ்வாமி நம்மாழ்வார் தமிழ் ஸ்ரீ மாசி பிரம்மோற்சவம் குதிரை வாகனம், திருத்தேர் மற்றும் தவழ்ந்த கண்ணன் திருக்கோலம்

## தமிழகம் முழுவதும் 4,219 மையங்களில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு நாளை தொடங்குகிறது

**சென்னை, மார்ச் 10:** தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் ஏப்ரல் இறுதி அல்லது மே மாதம் முதல் வாரத்தில் நடைபெற உள்ளது. இதனால் அரசு பொது தேர்வுகளை விரைவாக முடிக்கும் வகையில் பிளஸ் 2 தேர்வு கடந்த 2-ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.



இந்த நிலையில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு நாளை மறுநாள் 11-ந்தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் 6-ந்தேதி வரை நடைபெறுகிறது. இத்தேர்வினை 12,467 பள்ளிகளைச் சேர்ந்த 8 லட்சத்து 82 ஆயிரத்து 806 மாணவ-மாணவிகள் மற்றும் தனித்தேர்வர்கள் 26 ஆயிரம் பேர் என மொத்தம் 9 லட்சம் பேர் எழுதுகிறார்கள்.

தமிழகம் முழுவதும் 4219 மையங்களில் தேர்வு நடைபெறுகிறது. தேர்வு மையங்களில் காப்பி அடித்தல், விடைத்தாள்களை மாற்றுதல் போன்ற ஒழுங்கின செயல்களை ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தேர்வுத்துறை எச்சரித்துள்ளது.மேலும் தமிழகம் முழுவதும் 4954 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறார்கள். அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள் தலைமையில் தேர்வு மையங்கள் கண்காணிக்கப்படுகிறது.

வினா தாள்கள் தேர்வுக்கு முன்னதாக வெளியாகாமல் இருக்கவும் தகுந்த முன்னெச்சரிக்கைநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்டங்களில் உள்ள மையங்களுக்கு விடைத்தாள்கள் அன்று காலையில் செல்வதற்கான ஏற்பாடுகள் கல்வி அதிகாரிகள் மூலம் செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்விற்கும் போதுமான இடைவெளி விடப்பட்டுள்ளது மாணவர்கள் அனைத்து தேர்வையும் படித்து எழுதுவதற்கு வசதியாக அதிக விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது.

## தம்பிதுரை எம்.பி. பல்கலைக்கழகம் ஆக்கிரமித்துள்ள நிலங்களை மீட்க கலெக்டருக்கு நீதிமன்றம் உத்தரவு

**திருவள்ளூர், மார்ச் 10:** திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கோணாம்பேடு, நாராயண புரம் போன்ற கிராமங்களில், அரசியல்வாதிகளும், அவர்களது குடும்பங்களை சேர்ந்தவர்களும், பள்ளி மற்றும் கல்லூரிகளை கட்டி உள்ளனர். செயின்ட் பீட்டர்ஸ் உயர் கல்வி நிறுவனம், செயின்ட் ஜோசப் கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள், நிகர்நிலை பல்கலை உள்ளன. அதிமுக, எம்.பி, தம்பிதுரையின் குடும்ப உறுப்பினர்கள், செயின்ட் ஜோசப் கல்வி அறக்கட்டளையில் அறங்காவலர்களாக அங்கம் வகிக்கின்றனர்.




வருவாய் ஆவணங்களில் நீர்ப்பிடிப்பு, கல்லாங்குத்து என வகைப்படுத்தப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து, மாணவ- மாணவியருக்கான கல்லூரி விடுதிகள், பயிலகம், துணைமின் நிலையம், கல்லூரி பஸ்களை நிறுத்த தனி சாலை போன்றவற்றை அமைத்து உள்ளனர். கடந்த 2001-ம் ஆண்டு முதல், பொது நிலங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். திருவள்ளூர் மாவட்ட கலெக்டர், கோட்டாட்சியர் உள்ளிட்டோர் நிலங்களை அளந்து, ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும் என்று திருவள்ளூர் மாவட்டம் கோணாம்பேடு கிராம பொது நல சங்க தலைவர் ஜி. கருணாநிதி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் அதிமுக எம்.பி. தம்பிதுரைக்கு சொந்தமான பல்கலைக்கழகம் ஆக்கிரமித்துள்ள நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து சுமார் 2,476 சதுர மீட்டர் நிலம் ஆக்கிரமிப்புகளை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என திருவள்ளூர் ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## திருச்சியில் தி.மு.க மாநில மாநாடு: தஞ்சாவூரில் இருந்து கமகம மட்டன் பிரியாணி, சிக்கன் 65 தயார் செய்து வாகனங்களில் அனுப்பி வைப்பு

**தஞ்சாவூர், மார்ச் 10:** சட்டமன்றத் தேர்தலை ஒட்டி பல்வேறு கட்சியினரும் மாநாடு, பொதுக்கூட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தி.மு.க சார்பில் திருச்சி சிறுகனூர் பகுதியில் இன்று மாலை மாநில மாநாடு நடைபெறுகிறது.

ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சிறப்புரை ஆற்றுக்கின்றனர்.



மாநாட்டில் முதலமைச்சர் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட உள்ளார். தமிழகம் முழுவதும் இருந்து 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். காலையிலிருந்தே தொண்டர்கள், நிர்வாகிகள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் மாநாட்டில் பங்கேற்பவர்களுக்கு திருச்சி மட்டுமன்றி பல்வேறு இடங்களில் இருந்து மதிய உணவும் தயார் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தஞ்சாவூரில் தி.மு.க சார்பில் அதிகாலை முதல் கலைஞர் அறிவாலயம் எதிரில் உள்ள இடத்தில் மதிய உணவு தயார் செய்யப்பட்டு வருகிறது.

கமகம மட்டன் பிரியாணி, சிக்கன் 65, தால்சா அடங்கிய பிரியாணி பேக்கேஜ் செய்யப்பட்டு தஞ்சாவூரில் இருந்து வாகனம் மூலம் திருச்சிக்கு அனுப்பப்பட்டு வருகிறது. சுமார் 12 ஆயிரம் பேருக்கு கமகம மட்டன் பிரியாணி, சிக்கன் 65 தயார் செய்து வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

தஞ்சாவூரில் மட்டுமே 12 ஆயிரம் பேர்களுக்கு 1300 கிலோ மட்டன், 800 கிலோ சிக்கன் மூலம் மட்டன் பிரியாணி,சிக்கன் 65 தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்ட 6 பேரும் போட்டியின்றி தேர்வு



**சென்னை, மார்ச் 10:** மாநிலங்களவை தேர்தலில் தமிழ்நாட்டில் இருந்து போட்டியிட்ட 6 வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கால அவகாசம் நேற்றுடன் முடிவடையும் நிலையில் திமுக வேட்பாளர்கள் திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரஸ் வேட்பாளர் கிறிஸ்டோபர் திலக் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தேமுதிக வேட்பாளர் எல்.கே.சுதீஷ், அதிமுக வேட்பாளர் தம்பிதுரை, பாமக வேட்பாளர் அன்புமணி ஆகியோரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## காவிரி ஆற்றில் இறங்கி போராட்டம் நடத்திய அய்யாக்கண்ணு கைது



**திருச்சி, மார்ச் 10:** தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு விவசாயிகளுக்கு லாபகரமான விலை மற்றும் கோதாவரி காவேரி நதிகளை இணைக்க வலியுறுத்தி தொடர் போராட்டங்கள் நடத்தி வருகிறார்.

அந்த வகையில் இன்று சட்டமன்றத் தேர்தல் காலத்திலும் தடையின்றி கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளுக்கு கடன் வழங்க வலியுறுத்தியும், நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளை தடுத்திட கோரியும், கடந்த 2 வாரகாலமாக நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல்மணிகளை உடனடியாக கொள்முதல் செய்ய கோரியும், நாளை மறுநாள் திருச்சி வருகை தரும் பிரதமர் மோடியை சந்தித்து விவசாயிகளின் கோரிக்கை மனு அளிக்க அனுமதி வழங்க கோரியும் திருச்சி காவிரி ஆற்றில் இறங்கி திடீர் போராட்டம் நடத்தினர்.

ஓயாமரி மயானம் அருகே காவிரி ஆற்றில் அய்யா கண்ணு உள்ளிட்ட விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் இடுப்பளவு தண்ணீரில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது தகவல் அறிந்த கோட்டை போலீசார் அவர்களை கைது செய்தனர்.

அதன் பின்னர் அண்ணாமலை நகரில் உள்ள அய்யாக்கண்ணு வீட்டில் அனைத்து விவசாயிகளையும் வீட்டுக்காவலில் வைத்தனர். வீட்டின் முன்பு 25-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## இளைஞர் ஆகாஷ் மரணம்
### உடற்கூராய்வுக்கு உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவு!



**மதுரை, மார்ச் 10:** ஆகாஷ் உட்பட 5 பேரை மானாமதுரை போலீசார் கைது செய்தனர்.

டிஜிபி வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளார்.

மானாமதுரையில் போலீசாரால் கைது செய்யப்பட்ட ஆகாஷ் என்ற இளைஞர் உயிரிழந்த வழக்கில் உடற்கூராய்வு செய்ய உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது. கடந்த 6-ம் தேதி அழகர் என்பவரை அரிவாளால் தாக்கிய வழக்கில் ஆகாஷ் டெலிசன் (26) என்ற இளைஞர் உட்பட 5 பேர் மானாமதுரை போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து ஆகாஷ் 8ஆம் தேதி உயிரிழந்தாக போலீசார் தெரிவித்துள்ளனர். கைது செய்யும்போது தப்பிக்க முயன்று பாலத்தில் இருந்து குதித்ததில் கால் முறிவு ஏற்பட்டதாகவும், அதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மூச்சுத்திணறலால் உயிரிழந்ததாகவும் காவல்துறை தரப்பில் கூறப்படுகிறது.

இதற்கு பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்கள் எழுந்துவருகின்றன. போலீசாரால் இளைஞர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், அதனை மறைக்க இவ்வாறு கூறுவதாகவும் பெற்றோரும், எதிர்க்கட்சிகளும் குற்றம்சாட்டி வருகின்றனர். மேலும் உரிய நீதி கிடைக்கும் வரை ஆகாஷின் உடலை வாங்க மாட்டோம் என அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மதுரை அரசு மருத்துவமனையில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அஜித்குமார் காவல் மரணவழக்குப்போல இந்த சம்பவம் தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் இளைஞர் ஆகாஷின் உடலை பிரேத பரிசோதனை செய்ய உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த முழுசெயல்முறையையும் வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


































WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424














WANTED
M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588




WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!





சலிக்காமல்
காத்திருக்கும்
நிலவாக உனை
காண நான்

என் கவிதைகளின்
தலைப்பு நீ
உன் கவிதைகளின்
வரிகள் நான்

நான் என்றோ
தொலைந்தேன்

உன்னுள்
உனக்குள் நான்

அளவில்லாத
உன் அன்பு வேண்டும்
என் ஆயுள் முழுவதும்

கருங்கூந்தலை
கலைத்திடும்
தென்றல் காற்றும்
உன் ஸ்பரிசத்தையே
நினைவூட்டி செல்கிறது

## வாழ்க்கை தத்துவம்...



அன்புதான் உன் பலவீனம் என்றால், இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீதான். - அன்னை தெரசா.


விட்டுக்கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும், மன்னிப்பு கொடுங்கள் தவறுகள் குறையும், மனம் விட்டு பேசுங்கள் அன்பு அதிகமாகும். - அன்னை தெரசா.

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னை சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன். - ஆபிரகாம் லிங்கன்.

உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும், உன் செயல்ளுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும். சாக்ரடீஸ்.

மனநிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம், ஆடம்பரம் என்பது நாம் தேடிக்கொள்ளும் வறுமை. சாக்ரடீஸ்.

## "அடுத்தவர் முதுகு"



திரையுலகில் எல்லோராலும் நேசிக்கப்பட்ட ஒரு விசித்திரமான தயாரிப்பாளர்தான் நாதமுனி.

அவரைப் பற்றி ஒரு ரகசியம் ஏறக்குறைய எல்லா இளம் இயக்குநர்களுக்கும் தெரியும்.
ஆனால் யாரும் அதை வெளியில் சொல்ல மாட்டார்கள்.

தயாரிப்பாளர் நாதமுனி அடிக்கடி அறிவிப்பு விடுப்பார். "புது... இளம் டைரக்டர்கள்... நல்ல கதையோடு வாருங்கள்... கேட்கிறேன்."

ஆர்வமாய்ப் பல இளம் இயக்குநர்கள் வருவார்கள். கனவுகளோடு கதையைச் சொல்லுவார்கள்.

நாதமுனி கவனமாகக் கேட்பார்.
கதை பிடித்து விட்டால் உடனே சொல்வார், " வாவ்... சூப்பர் கதைப்பா... இதை நானே வாங்கிக்கிறேன்." என்பார்.

ஒரு சிறிய தொகை பணம் கொடுத்து
அந்த இளம் இயக்குநரை அனுப்பி விடுவார்.

சில மாதங்களில் அதே கதை
பெரிய ஹீரோவுடன், பெரிய பட்ஜெட்டில் படமாகும். ஆனால் டைட்டிலில். "கதை & இயக்கம் : நாதமுனி." என்றுதான் வரும்.

இயக்கம் கூட அவராக செய்வதில்லை. யாராவதொரு இளம் இயக்குநரை அழைப்பார். "இந்த படம் நீ தான் இயக்கணும்.... ஆனா ஒரு கண்டிஷன்... டைட்டிலில் 'டைரக்ஷன்'ன்னு என் பேர்தான் வரும்!... உனக்கான சம்பளம் எதிர்பார்க்காத அளவுக்குக் கிடைக்கும்." என்று பேரம் பேசுவார்.

வாய்ப்பு கிடைத்தாலே போதும் என்று
பல இளம் இயக்குநர்கள் சம்மதிப்பார்கள்.

அந்த படம் ஹிட்.

மக்கள் நாதமுனியை. "ஜீனியஸ் டைரக்டர்" என்று புகழ்ந்தார்கள்.

ஆண்டுகள் சென்றன. ஒரு முறை ஒரு புதிய இளைஞன் கதையுடன் வந்தான்.

அவன் அமைதியாக கதையைச் சொன்னான். கதை முடிந்ததும் நாதமுனி வழக்கம் போலச் சொன்னார்:

"சூப்பர் கதை.... இதை நான் வாங்கிக்கிறேன்."

அந்த இளைஞன் மெதுவாக சிரித்தான். 'சார்... ஒரு சின்ன சந்தேகம்."

"என்ன?"

"இந்தக் கதையை நான் உங்களுக்குக் கொடுத்தா டைட்டிலில் உங்க பேர்தான் வரும் இல்லையா?"

நாதமுனி சிரித்தார். "அதுதான் இண்டஸ்ட்ரி ப்ராக்டிஸ்."

அந்த இளைஞன் தனது மொபைலை எடுத்தான். அதில் ஒரு வீடியோ. அந்த வீடியோவில் பல இளம் இயக்குநர்கள் பேசினார்கள்.

"என் கதையை நாதமுனி வாங்கிட்டார்...'

"நான் இயக்கின படத்துக்கு நாதமுனி அவர் பேர்தான் போட்டார்..."

"எங்களுக்கு வாய்ப்பு தர்ற மாதிரி ஏமாத்தினார்..."

அந்த இளைஞன் சிரித்தபடி சொன்னான், "சார்... உண்மையில் நான் ஒரு டைரக்டர் இல்லை!... நான் ஒரு ஜர்னலிஸ்ட்.... சினிமா உலகில் மற்றவர் முதுகில் ஏறி மேலே போகிறவர்களின் கதையைச் சேகரிக்க வந்தவன்."

சில வாரங்களில் அந்த வீடியோ வெளிவந்தது.

அதுவரை மற்றவர்களின் முதுகில் ஏறி உயர்ந்திருந்த நாதமுனி ஒரே நாளில் கீழே விழுந்தார்.

அப்போதுதான் சினிமா உலகமே புரிந்துகொண்டது, 'மற்றவர் முதுகில் ஏறி சென்ற உயரம் ஒரு நாள் விழுவதற்கே உருவானது' என்று.



(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*நபர் 1: ஏன் எப்பவும் போனும் கையுமா இருக்க, மனுசங்களோடவும் பழகலாம்ல..*

*நபர் 2: நான் சொன்னத கேக்குது, கேட்டதை தருது.. பிடிச்சா மாதிரி நடந்துக்குது.. மனுசங்ககிட்ட இதெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?*



## தினம் ஒரு சமையல்



## சாமை தயிர் சாதம்

**தேவையான பொருட்கள்:**

*நபர்கள் -2*
*சாமை சாதம் -1 கப்*
*தயிர் -1 கப்*
*பால் -1/4 கப்*
*மிளகாய் -1 பச்சை*
*இஞ்சி -1 துண்டு*
*கொத்தமல்லி -சிறிதளவு*
*மாதுளை -முத்துக்கள் சிறிதளவு*
*எண்ணெய் -1டீஸ்பூன்*
*கடுகு -1/2டீஸ்பூன்*
*பெருங்காயம் -1/4டீஸ்பூன்*
*முந்திரி -4*
*கருவேப்பிலை -1 கொத்து*

**செய்முறை:**



ஒரு கப் சாமை அரிசியை எடுத்து நன்றாக கழுவி மூன்று கப் அளவு தண்ணீர் சேர்த்து குழைய வேக வைத்துக் கொள்ளவும்..

சாதத்துடன் தயிரும் உப்பும் சேர்த்து கலந்த பின்னர் அதனுடன் இஞ்சி பச்சை மிளகாய் கொத்தமல்லி மாதுளை முத்துக்களை சேர்த்து கலந்து விடவும்..

கடாயில் எண்ணெய் விட்டு கடுகு பெருங்காயம், முந்திரி கருவேப்பிலை தாளித்து தயிர்சாதத்துடன் சேர்க்கவும்

இப்போது சுவையான ஆரோக்கியமான சாமை தயிர் சாதம் தயார்...

## ரணக்கள்ளி பயன்கள்



ரணகள்ளி இலை மனித உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களை குணமாக்கும் சக்தி வாய்ந்த தாவரமாக விளங்குகிறது. கண், காது, குடல், காய்ச்சல், மஞ்சள் காமாலை போன்ற பலநோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

ரணகள்ளி இலை பசை போன்ற திரவத்தை கொண்டுள்ளது. இந்த இலை அமிலத்தன்மையுடனும் உவர்ப்புத்தன்மையையும் கொண்டிருக்கும். ஆயுர்வேதத்தில் ரணகள்ளி இலையின் பங்கு என்ன, அதன் நன்மைகள் என்னென்ன என்ற குறிப்புகளை விளக்குகிறார் ஆயுர்வேத மருத்துவ நிபுணர் G.K.தாராஜெயஸ்ரீ BAMS.

மிகச்சிறிய தாவர வகையைச் சேர்ந்தது ரணகள்ளி. இதை அழகுக்காக பலர் வீடுகளில் வளர்க்கிறார்கள். வெப்பம் நிறைந்த பகுதியில் இவை காணப்படும். ரணகள்ளி பெரும்பாலும் அலங்கார தாவரமாக பயன்படுத்தப்பட்டாலும் இது முக்கிய மூலிகைகளில் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. ஆயுர்வேதத்தில் இது எந்த நோய்க்கு எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதை பார்க்கலாம்.

இதன் இலைகளை நசுக்கி சாறெடுத்து கண்களை சுற்றி தடவி வந்தால் கண் வலி நீங்கும்.

இதன் சாறு மஞ்சள் காமாலை நோய்யை குணப்படுத்த.

ரணகள்ளி இலைகளை நன்கு உலர வைத்து அதன்பின் தேநீர் தயாரித்து குடித்து வந்தால் மலச்சிக்கலில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

வயிற்றுப்போக்கிலிருந்து நிவாரணம் பெற இதன் இலைகளிலிருந்து சாறு எடுத்து அதில் தேன் கலந்து குடித்து வந்தால் குணமாகும்.

காயங்கள் ஏற்பட்டால் சிறிது ரணகள்ளி இலைகளை எடுத்து மிதமான தீயில் சூடாக்கி நசுக்கி காயத்தின் மீது வைத்து கட்டி வந்தால் விரைவில் குணமாகும்.

ரணகள்ளி சாற்றை குடித்து வந்தால் காய்ச்சல் தணியும். இந்த இலைகளில் உள்ள ஆண்டிபிரைடிக் பண்பு காய்ச்சலின் அறிகுறிகளை போக்க உதவும்.

இது கல்லீரலின் செயல்பாட்டையும் அதிகரிக்கும்.

## ஜனநாயகன் படத்திற்கு தொடரும் சிக்கல்... சென்சார் குழுவிற்கு இப்படியொரு பிரச்சனையா?



நடிகர் விஜய், தமிழ் சினிமாவின் பாக்ஸ் ஆபிஸ் கிங்காக ராஜ்ஜியம் செய்து வந்தவர். இதுவரை 69 படங்கள் நடித்துவிட்டார், கடைசியாக அவர் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படம் 2026, பொங்கல் ஸ்பெஷலாக வெளியாகி இருக்க வேண்டியது.

எச். வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெட்ச் என பலர் நடித்துள்ள இப்படத்திற்கு அனிருத் தான் இசை. கடந்த வருடம் படு பிரம்மாண்டமாக ஜனநாயகன் படத்தின் இசை வெளியீட்டு விழா மலேசியாவில் யாரும் எதிர்ப்பார்க்காத வண்ணம் மாஸாக நடந்தது.

அந்த கொண்டாட்டத்தோடு படத்தை பொங்கல் ஸ்பெஷலாக காணலாம் என ரசிகர்கள் சந்தோஷமாக இருக்க கடைசியில் படம் வெளியாகாமல் போனது.

படம் தள்ளிப்போனதில் இருந்து இப்போது ரிலீஸ் ஆகும், அப்போது ரிலீஸ் ஆகும் என ரசிகர்களும் காத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

கடைசியாக படத்தை ரிவைசிங் கமிட்டி இன்று ஜனநாயகன் படத்தை பார்க்க உள்ளார்களாம், அடுத்து ரிலீஸ் தேதி வெளிவந்துவிடும் என ரசிகர்கள் எதிர்ப்பார்த்தார்கள்.

ஆனால் தற்போது வந்த தகவல் என்னவென்றால் ரிவைசிங் கமிட்டி குழுவில் ஒரு உறுப்பினருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் படம் இன்று ஸ்க்ரீனிங் இல்லையாம். அடுத்து எப்போது அவர்கள் படம் பார்ப்பார்கள் என தெரியவில்லை.



ராசி கண்ணா அழகிய சேலையில் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை தற்போது வெளியிட்டு உள்ளார். எப்படி இருக்கிறார் என நீங்களே பாருங்க.




## பிரம்மாண்டமாக உருவாகும் கல்கி 2 படத்திற்காக கமல்ஹாசன் வாங்கும் சம்பளம்... இத்தனை கோடியா?


நாக் அஸ்வின் இயக்கத்தில் படு பிரம்மாண்டமாக தயாராகி வெளியான படம் கல்கி 2898 ஏடி.

பிரபாஸ், அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோனே உள்ளிட்ட பலர் நடிக்க உருவான இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்தார்.

கடந்த 2024ம் ஆண்டு தெலுங்கு, தமிழ், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியாக படம் ரூ. 1100 கோடிக்கும் அதிகமான வசூல் வேட்டை நடத்தியிருந்தது.

முதல் பாகத்தில் சுமதி கதாபாத்திரத்தில் தீபிகா படுகோனே நடித்தார், ஆனால் அவர் 2ம் பாகத்தில் இருந்து வெளியேறியிருக்கிறார். அவருக்கு பதில் வேறு யார் நடிக்கப்போகிறார் என இன்னும் அதிகாரப்பூர்வமாக தெரியவில்லை.

தற்போது கல்கி 2898 ஏடி படத்தின் 2ம் பாக படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. கமல்ஹாசன் மற்றும் அமிதாப் பச்சன் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன.



2ம் பாகத்தில் அமிதாப் பச்சனின் புகைப்படங்கள் சமீபத்தில் சமூக வலைதளங்களில் வெளியாகின. கமல்ஹாசன் சுப்ரீம் யாஸ்கின் என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

முதல் பாகத்தை போல 2ம் பாகத்திலும் சர்ப்ரைஸ் காத்திருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது, அடுத்த ஆண்டு படம் திரைக்கு வர உள்ளது. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் கமல்ஹாசனுக்கு ரூ. 150 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# கொல்லங்குடி வெட்டுடையகாளியம்மன் கோயில்

தமிழ்நாட்டின் கொல்லங்குடியில் உள்ள இந்து கோவில் வெட்டுடையகாளியம்மன் கோயில் இது சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள 18ம் நூற்றாண்டில் உருவான கோயில் ஆகும். இங்குள்ள

மூலவர்:
வெட்டுடையா காளி.

அமைவிடம்
கொல்லங்குடி இது சிவகங்கை மாவட்டத்தில் மதுரை - தொண்டி நெடுஞ்சாலையில் காளையார்கோயில் அருகே உள்ளது.

நம்பிக்கை
யாரேனும் தவறு செய்துவிட்டால், அவர்களைத் தண்டிக்க "நாணயம் தவறியோர்க்கு நாணயம் வெட்டிப்போடு" என்று சொல்லும் வழக்கமும், அநியாயம் செய்யும் குற்றவாளிகளை அம்பிகை தண்டிப்பாள் என்ற நம்பிக்கையும் இங்கு உள்ளது. நம்பிக்கை துரோகம், பாதிப்பிற்கு உள்ளானோர் தங்களுக்கு நீதி கிடைக்க இங்கு அம்பாள் சன்னதியில் காசு வெட்டி வழிபடும் வழக்கம் அரசு அனுமதியுடன் நடைபெறுகிறது.

வரலாறு
முற்காலத்தில் இவ்வூரில் வசித்த ஒரு பக்தரின் கனவில் தோன்றிய ஐயனார், தனது சிலை வடிவம் ஈச்ச மரக்காடான இங்கு இருப்பதாக உணர்த்தினார். அதன்படி, பக்தர் இங்கு வந்து குறிப்பிட்ட இடத்தில் தோண்டினார். கோடரி வெட்டுப்பட்டு, சிலை கிடைக்கப்பெற்றது. இதன் காரணமாக இவருக்கு வெட்டுடையார் ஐயனார் என்றே பெயர் ஏற்பட்டது. இவரை கருப்பவேளார், காரிவேளார் என்ற பக்தர்கள் பூஜித்து வந்தனர். ஒருசமயம் நள்ளிரவில் ஐயனார் சன்னதிக்கு அருகில் ஒரு ஈச்சமரத்தடியில் பேரொளி மின்னியதைக் கண்டனர். மறுநாள் காலையில் அங்கு அம்பிகையின் யந்திரம் இருந்தது. அவ்விடத்தில் அம்பிகைக்கு சிலை வடித்து பிரதிஷ்டை செய்தனர். சுவாமியின் பெயரால் அவளுக்கு "வெட்டுடையார் காளி' என்றே பெயர் ஏற்பட்டது. காலப்போக்கில் இவள் பிரசித்தி பெறவே, இவளது பெயரிலேயே தலம் அழைக்கப்பெற்றது.

வெட்டுடையார் காளியம்மன் கோவில் வரலாறு
சிவகங்கை மாவட்டம் கொல்லங்குடி அரியாகுறிச்சியில் அமைந்துள்ள



வெட்டுடையார் காளியம்மன் கோயில், ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட ராணி வேலுநாச்சியாருக்காக உயிர் நீத்த 'உடையாள்' என்ற பெண்ணுக்கு எழுப்பப்பட்ட தியாகத்தின் சின்னமாகும். வெட்டுப்பட்ட உடையாள், காளியம்மனாக வழிபடப்படுகிறாள். இங்கு காசு வெட்டிப் போட்டு வேண்டுதல் வைத்தால் நீதியும், நியாயமும் கிடைக்கும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். கோவில் வரலாற்றின் முக்கிய

அம்சங்கள்:
தியாக வரலாறு:
ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், வேலுநாச்சியாரின் இருப்பிடத்தைக் காட்ட மறுத்து, அவர்களால் வெட்டுப்பட்ட 'உடையாள்' என்ற சிறுமியின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், வேலுநாச்சியாரால் இக்கோயில் கட்டப்பட்டது.

பெயர்க்காரணம்:
வாளால் வெட்டுப்பட்டு உயிர் நீத்ததால், அந்தப் பெண் 'வெட்டுடையாள்' என அழைக்கப்பட்டு, பின்னாளில் வெட்டுடையார் காளியம்மனாக வழிபடப்பட்டாள்.

நீதிபதி அம்மன்:
இக்கோயில் அம்மன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் 'நீதிபதி'யாகவே கருதப்படுகிறார்.

காசு வெட்டுதல்:
நம்பிக்கை துரோகம், கொள்ளை, அவமரியாதை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், தங்களுக்கு நீதி கிடைக்க அம்மன் சன்னதியில் காசு (நாணயம்) வெட்டிப்போட்டு, குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டுகின்றனர்.

கோவில் சிறப்பு:
கொல்லங்குடி காளித்தீர்த்தம் என்ற புனித குளம் உள்ளது. மூலவர் 8 கரங்களுடன், மேற்கு நோக்கிய நிலையில், அசுரனை வதம் செய்தபடி கம்பீரமாகக் காட்சி தருகிறார். திருவிழா: பங்குனி திருவிழா மற்றும் ஆடிப்பெருக்கு இங்கு மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. வேலுநாச்சியார் தான் கட்டிய அந்த வீரக்கல்லுக்கு தனது திருமாங்கல்யத்தையே முதல் காணிக்கையாக அளித்து வணங்கிய தலம் இது.

**M. ராதாகிருஷ்ணன்,**
அஞ்சல் துறை (ஓய்வு)
வாணியம்பாடி -635751

# தினம் ஒரு தலைவர்கள் ஆனந்த குமாரசுவாமி வரலாறு

ஆனந்த கெந்திஷ் முத்து குமாரசுவாமி 22 ஆகத்து 1877 9 செப்டம்பர் 1947), இலங்கை மீமெய்யியலாளரும் வரலாற்றாளரும் இந்தியக் கலையின் மெய்யியலாளரும் ஆவார். சிறந்த ஓவியர், சிற்பி, கட்டடக்கலைஞர், கலைத் திறனாய்வாளர், ஆய்வாளர், நூலாசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். இவர் இந்தியப் பண்பாட்டைக் குறிப்பாக "பழங்கால இந்தியக் கலையை மேற்கத்திய நாடுகளுக்கு அறிமுகப்படுத்துவதற்குப் பெரிதும் காரணமானவர்" என அவர் விவரிக்கப்படுகிறார்.

வாழ்க்கைக் குறிப்பு
ஆனந்த குமாரசுவாமி, இலங்கையில் கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் பொன்னம்பலம்-குமாரசுவாமி குடும்பத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் சட்டமன்ற உறுப்பினரும் மெய்யியலாளருமான சர் முத்து குமாரசுவாமிக்கும் அவரது ஆங்கிலேய மனைவியான எலிசபெத் பீபிக்கும் மகனாக 1877 ஆகத்து 22 இல் பிறந்தார். தாயார் இங்கிலாந்தின் கெண்ட் என்னும் நகரைச் சேர்ந்தவர். ஆனந்தாவுக்கு அகவை இரண்டாக இருந்தபோது அவரது தந்தை இறந்துவிட்டார்,

ஆனந்தா தனது குழந்தைப் பருவத்தையும் கல்வியின் பெரும்பகுதியையும் வெளிநாட்டில் கழித்தார். ஆனந்த குமாரசுவாமி தாயாருடன் 1979 ஏப்ரலில் இங்கிலாந்து சென்றார். அங்கு குளொசுடர்சயரில் வைக்கிளிஃப் கல்லூரியில் கல்வி பயின்றார். 1900 ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் பயின்று நிலவியல், தாவரவியலில் பட்டம் பெற்றார். 1902 சூன் 19 இல், குமாரசுவாமி ஒரு ஆங்கிலேயப் புகைப்படக் கலைஞரான எத்தெல் மேரி பார்ட்ரிட்ச் என்பவரை மணந்து, அவருடன் இலங்கை வந்தார். அவர்களது திருமணம் 1913 வரை நீடித்தது. ஆனந்த குமாரசுவாமி இடாய்ச்சு, பிரெஞ்சு, பாரசீகம், சிங்களம், சமக்கிருதம், பாளி, இந்தி, தமிழ் ஆகிய மொழிகளிலும் சிறந்த புலமையுடையவராக விளங்கினார். 1902 இற்கும் 1906 இற்கும் இடையில் இலங்கையின் கனிமவியல் ஆய்வுக்காக குமாரசுவாமியின் செய்த களப்பணி, அவருக்கு அறிவியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுத் தந்தது, இது இலங்கையின் நிலவியல் ஆய்வுத் துறையை உருவாக்கத் தூண்டியது. இலங்கையில் இருந்தபோது, ஆனந்த குமாரசுவாமியும் எத்தெலும் இடைக்கால சிங்களக் கலையில் கூட்டாக ஆய்வை மேற்கொண்டனர். குமாரசுவாமி உரை எழுத, எத்தேல் புகைப்படங்களை வழங்கினார். இலங்கையில் அவரது பணி குமாரசுவாமியின் மேற்கத்தியவாத எதிர்ப்பு உணர்வுகளை தூண்டியது. இவர்களின் மணமுறிவுக்குப் பிறகு, எத்தேல் இங்கிலாந்துக்குத் திரும்பி, அங்கு ஒரு பிரபலமான நெசவாளர் ஆனார், பின்னர் எழுத்தாளர் பிலிப் மைரெட் என்பவரை மணந்தார்.


பின்னர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் ரத்னா தேவி எனும் இலங்கைப் பெண்ணை மணம் புரிந்தார். இவருக்கு நாரதா, ரோஹினி என இரு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் நாரதா பின்னர் ஒரு விமான விபத்தில் உயிரிழந்தார். இந்தத் துக்கம் தாளாது ரத்னா தேவியும் சிறிது காலத்தில் காலமானார்.

இலங்கையில் சேவை
அந்தக் காலத்தில் விடுதலை (சுதேசிய) உணர்வால் உந்தப்பெற்று சமூக சீர்திருத்தச் சங்கத்தை (1905) நிறுவினார். அதன் சார்பில் என்னும் இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகச் சேவையாற்றினார். 1906 ஆம் ஆண்டு சூன் நாலாம் நாள் முதன் முதலாக யாழ்ப்பாணம் சென்றார். அங்கு உரையாற்றும்போது "நமது கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்பினை உலகில் வேறெங்கும் காணமுடியாது....எம்மவர் விஞ்ஞானக் கல்வியையும் கைத்தொழிற்கல்வியையும் நாடுகின்றனர். இவை அவசியமானவையே! ஆனால் இவை எல்லாம் பண்பாடு என்னும் அடிப்படையிலிருந்து வரவேண்டும்..." எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் அவருக்கு வித்தியா விநோதன் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

கலைச் சேவை
1907 ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்திலும் இந்தியாவிலும் கலை முயற்சிகளில் ஈடுபட்டார். 1911 ஆம் ஆண்டில் அலகாபாத்தில் நடைபெற்ற பொருட்காட்சியின் கலைப்பகுதிக்குப் பொறுப்பு வகித்தார்.

இந்திய விடுதலை இயக்க ஆதரவாளராக, அதன் தலைவர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். ரவீந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதை முதலியோரின் நண்பராக வாழ்ந்தார்.

இந்தியக்கலைகளின் இறைமையை உலகிற்கு எடுத்துக் காட்டியசிறந்த தூதுவராகக் கருதப்படுபவர். இறைவனின் ஐந்தொழிலைப் (பஞ்சகிருத்தியத்தைப்) பிரதிபலிக்கும் சிவநடனத்தை விளக்கி 1912-இல் 'சித்தாந்த தீபிகை'யில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை மூலம் இந்தியக் கலைகளின் சிறப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாகக் கொள்ளப்படுகிறார். ஏராளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.



சகோதரி நிவேதிதையுடன் இணைந்து பௌத்த புராணக்கதைகளையும் தொகுத்துத் தந்துள்ளார். 'பிரபுத்த பாரதா' என்ற இதழில் 1913, 1914, 1915 ஆம் ஆண்டுகளில் தாயுமானவர் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிலவற்றை எழுதினார்.

பொஸ்டனில் சேவை
1917 முதல் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் (பாஸ்ட்டன்) நகரில் அமைந்திருந்த நுண்கலை அருங்காட்சியகத்தில் கீழைத்தேயப் பிரிவின் பணிப்பாளராகவும், பின்பு ஆய்வாளராகவும் பணிபுரிந்தார். இங்கு அவர் டோனா லூசா (DONA LUSA) என்னும் ஆர்ஜெண்டினா பெண்மணியைச் சந்தித்து அவரைத் திருமணம் புரிந்து கொண்டார். இவர்களுக்கு ராமா என்னும் பெயர் கொண்ட ஆண்குழந்தை பிறந்தது.

ராமா பின்னர் இந்தியாவின் ஹரித்வாரில் உள்ள குருகுல (GURUKUL) பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்று அமெரிக்காவின் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் வைத்தியசாலையில் வைத்தியராகப் பயிற்சி பெற்று அமெரிக்காவில் வைத்தியராகத் தொழிலாற்றியவர்.

ஆனந்த குமாரசுவாமி அவர்கள் தமது எழுபதாவது வயதில் செப்டம்பர் 9 1947 இல் அமெரிக்காவில் பொஸ்டன் (பாஸ்ட்டன்) நகரில் காலமானார்.

# டில்லி-கோவா விமானத்தில் பீடி புகைத்த பயணி மீது வழக்குப் பதிவு

**புதுடெல்லி, மார்ச் 10:**

டில்லி-கோவா விமானத்தில் பீடி புகைத்ததாக பயணி ஒருவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

டில்லியைச் சேர்ந்த ஆஷிஷ் என்பவர் தலைநகர் தில்லியிலிருந்து கோவாவிற்கு ஆகாசா ஏர் விமானத்தில் சனிக்கிழமை பயணித்த போது இந்த சம்பவம் நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமான நிறுவனத்தின் புகாரின்படி, பயணி விமானக் கழிப்பறைக்குள் 'பீடி' புகைத்ததாகக் கூறப்படுகிறது.

மேலும் அவர் ஒரு லைட்டரை வைத்திருந்ததாகவும், இது விமானம் மற்றும் விமானத்தில் பயணிகளின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் போலீஸ் அதிகாரி கூறினார்.

கோவா வந்தவுடன் அந்த பயணி உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக அகாசா ஏர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேசமயம் இந்த விவகாரத்தில் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதாக விமான நிறுவனம் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கோவாவில் உள்ள மோபா விமான நிலைய காவல் நிலையத்தில் பயணி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விவகாரத்தில் விசாரணை தொடர்ந்து நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருவாயூர் தேவஸ்வம் வாரியத்துக்கு 50 ஆண்டுகளுக்குப் பின் பெண் உறுப்பினர்!



**புதுடெல்லி, மார்ச் 10:**

குருவாயூர் தேவஸ்வம் வாரிய உறுப்பினராக சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் பெண் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

கேரளத்தின் குருவாயூரில் உள்ள புகழ்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலை குருவாயூர் தேவஸ்வம் வாரியம் நிர்வகித்து வருகிறது. மொத்தம் 9 உறுப்பினர்களைக் கொண்ட இந்த வாரியத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாக எம்.யூ.ஷினிஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

பெண்கள் கடந்த 1970-களில் வாரியத்தில் உறுப்பினர்களாக இடம்பெற்றிருந்தனர். குருவாயூர் தேவஸ்வம் விதிகள் கடந்த 1978-இல் திருத்தப்பட்டன. அதன் பிறகு பெண் ஒருவர் வாரிய உறுப்பினராக நியமிக்கப்படுவது இதுவே முதல்முறை.

தேவஸ்வம் வாரியத்தின் தலைவராக ஞாயிற்றுக்கிமை பதவியேற்றுக் கொண்ட ஏ.வி. கோபிநாத் இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் கூறுகையில், '48 ஆண்டுகளுக்குப் பிறகு வாரிய உறுப்பினராக ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளார். சர்வேதச மகளிர் தினத்தில் அவர் நியமிக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்பானது' என்றார்.

# தங்கள் முழு ஆற்றலை பெண்கள் உணர வேண்டும்: குடியரசுத் தலைவர் முர்மு வலியுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 10:**



பெண்களின் வலிமை மற்றும் சாதனைகளைப் பாராட்டிய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பெண்கள் தங்கள் முழு ஆற்றலை உணர வேண்டும் என வலியுறுத்தினார்.

சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்று பேசியதாவது: கல்வி, நிர்வாகம், நீதித்துறை, பாதுகாப்பு, மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், கலைகள், தொழில் முனைவு மற்றும் விளையாட்டு ஆகிய அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.

சுய உதவிக் குழுக்கள் மூலம் ஊரக பெண்களும், பொருளாதார ரீதியாக தற்சார்பு நிலையை அடைந்து வருகின்றனர். கிராம வளர்ச்சி, வேலை வாய்ப்பு, ஸ்டார்ட்-அப் மற்றும் கார்ப்பரேட் துறையில் பெண்கள் தலைமை தாங்குகின்றனர். பெண்கள் தங்கள் முழு ஆற்றலை உணர வேண்டும். இவ்வாறு முர்மு கூறினார்.

பிரதமர் மோடி நேற்று வெளியிட்ட வாழ்த்து செய்தியில், "சர்வதேச பெண்கள் தினத்தில், நமது பெண்களுக்கு வாழ்த்துகள். அனைத்து துறையிலும், பெண்கள் உறுதியுடனும், படைப்பாற்றலுடனும், ஈடு இணையற்ற ஆர்வத்துடனும் நாட்டை முன்னேற்றம் அடையச் செய்கின்றனர். அவர்களின் சாதனைகள் நமது தேசத்துக்கு ஊக்குவிப்பை அளிக்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் நமது தீர்மானத்துக்கு வலிமை சேர்க்கின்றன. வளமான தேசத்துக்கு பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து வழிகாட்டும்" என கூறியுள்ளார்.

# பஞ்சாபில் அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1,000 4 ஆண்டுக்குப் பிறகு வாக்குறுதி நிறைவேற்றம்

**சண்டிகர், மார்ச் 10:**



சண்டிகர்: பஞ்சாபில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் மாதம் ரூ.1,000 மற்றும் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கும் புதிய திட்டத்தை ஆம் ஆத்மி அரசு நேற்று அறிவித்தது.

கடந்த 2022-ல் நடைபெற்ற பஞ்சாப் தேர்தலின் போது, தங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படும் என ஆம் ஆத்மி கட்சி வாக்குறுதி அளித்தது. தேர்தலில் வெற்றி பெற்ற ஆம் ஆத்மி கட்சி சார்பில் பகவந்த் மான் முதல்வரானார். 4 ஆண்டுகளாகியும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில், மகளிர் தினமான நேற்று பஞ்சாப் சட்டப்பேரவையில் நிதியமைச்சர் ஹர்பால் சிங் சீமா 2026- 27 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அப்போது 'முதலமைச்சர் மாவன் தியான் சத்கார் யோஜனா' என்ற திட்டத்தை அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1,000, பட்டியலின பெண்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கப்படும் என அவர் அறிவித்தார். இந்தப் பணம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் சீமா கூறும் போது, "18 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் இத்திட்டத்தில் பயன் பெறலாம். தற்போதுள்ள அல்லது முன்னாள் நிரந்தர அரசு ஊழியர்கள், எம்.பி./ எம்எல்ஏ.க்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள் ஆகிய ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் இதில் பயன்பெறலாம்.

மேலும், முதியோர் ஓய்வூதியம், கணவனை இழந்தவர்கள், ஆதரவற்றோர் ஓய்வூதியம் அல்லது மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் போன்ற ஏற்கெனவே உள்ள சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயனடைந்து வரும் பெண்களும் இத்திட்டத்துக்குத் தகுதியுடையவர்கள்" என்றார்.

# "ராஜினாமா செய்தது எனது மனப்பூர்வமான முடிவு" - முன்னாள் ஆளுநர் ஆனந்தபோஸ் தகவல்

**கொல்கத்தா, மார்ச் 10:**

மேற்கு வங்க ஆளுநராக இருந்த சி.வி.ஆனந்த போஸ், சில நாட்களுக்கு முன்பு ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா குறித்து சர்ச்சைகள் எழுந்தன. பல்வேறு நபர்களின் அழுத்தம் காரணமாகவும், குறுக்கீடு காரணமாகவும் சி.வி. ஆனந்த போஸ் ராஜினாமா செய்ததாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார்.

இதைத் தொடர்ந்து அவர் நேற்று கொல்கத்தா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேற்கு வங்க ஆளுநராக நான் 1,200 நாட்கள் பதவி வகித்தேன். இது கிரிக்கெட்டில் 12 செஞ்சுரிகள் அடிப்பதற்கு சமம்.

நான் ராஜினாமா செய்தது மனப்பூர்வமாக எடுத்த முடிவு. பல முறை யோசித்த பின்னரே நான் ராஜினாமா செய்தேன். எப்போது ராஜினாமா செய்யவேண்டும் என்பதற்கு எனக்கு அதிக சந்தர்ப்பம் தரப்பட்டது. சரியான நேரம் வந்ததும் ராஜினாமா செய்தேன். இதில் யாருடைய குறுக்கீடும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பஞ்சாப் மாநிலத்தில் ஆயுத விற்பனையில் ஈடுபட்ட 2 பேர் கைது

**சண்டிகர், மார்ச் 10:**

பஞ்சாபில் ஆயுதங்கள் விற்பனையில் ஈடுபட்ட 2 பேரை மாநில போலீஸார் கைது செய்து உள்ளனர்.

இது குறித்து மூத்த போலீஸ் அதிகாரி கவுரவ் டோரா செய்தியாளர்களிடம் கூறுகையில், "கைதான இருவரிடம் இருந்து 5 துப்பாக்கிகளை பறிமுதல் செய்துள்ளோம்.

அவர்களில் ஒருவர் 18 வயதுடையவர். இவர்களுக்கு பிலிப்பைன்ஸ், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஆயுத கடத்தல் கும்பல்களுடன் தொடர்பு உள்ளது. இவர்கள் அண்மையில் மத்திய பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கு ரூ.87,000-க்கு கைத் துப்பாக்கியை விற்பனை செய்துள்ளனர்" என்று தெரிவித்தார்.

# ரூ.1-க்கு காலணி விற்பனை: கூட்டத்தில் கேரள போலீஸார் தடியடி

**கோழிக்கோடு, மார்ச் 10:**

கேரள மாநிலம் கோழிக்கோடு நகரில் உள்ள ஒரு கடை நிர்வாகம், முதலில் வரும் 100 பேருக்கு 1 ரூபாய்க்கு காலணி வழங்கப்படும் என விளம்பரம் செய்தது. இதனால் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள், அதிகாலை 2 மணியிலிருந்தே அப்பகுதியில் திரண்டனர். இதனால் அங்கு நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து பாதித்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போனதால், கூட்டத்தைக் கலைக்க போலீசார் லேசான தடியடி நடத்தினர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியதாக கடையின் உரிமையாளர்களை அழைத்துச் சென்ற போலீஸார், அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கையிருப்பில் 25 கோடி பேரல் பெட்ரோலியப் பொருள்கள்




**புதுடெல்லி, மார்ச் 10:**

இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் ஈரானுக்கு எதிராக போரை நடத்தி வரும் நிலையில், உலகளாவிய கச்சா எண்ணெய் சந்தையில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக, ஈரான் 'ஹோர்முஸ் ஜலசந்தியை மூடியுள்ளதால், கச்சா எண்ணெய் வினியோகம் முடங்கியுள்ளது. இதன் நேரடி பாதிப்பு இப்போது இந்தியாவிலும் எதிரொலிக்க தொடங்கியுள்ளது. இந்நி லையில், நாடு முழுவதும் சமையல் கியாஸ் சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டது. புதிய விலை மாற்றத்தின்படி வீட்டு உபயோகத்திற்கான 14.2 கிலோ சிலிண்டரின் விலை ரூ.60 உயர்த்தப்பட்டது.

நாளுக்கு நாள் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் போர் உக்கரம் அடைந்து வருகின்றன. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் நிலவி வருகிறது. நாளுக்குநாள் இதுகுறித்த நெருக்கடி அதிகரித்து வருவதால் பெட்ரோல், டீசல் விலை உயரும் என்ற அச்சம் நிலவி வருகிறது. மேலும் கியாஸ் சிலிண்டர் தட்டுபாடு ஏற்படும் எனவும் தகவல் பரவியது. இதனால் பொது மக்கள் இடையே அச்சம் ஏற்பட்டது. டி பேரலுக்கும் அதிகமான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகாவும் அடுத்த 2 மாதங்களுக்கு உள்நாட்டு தேவையை எந்த பிரச்சினையும் இல்லாமல் சமாளிக்க முடியும் என மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

# கேரள மாணவர்களுடன் கலந்துரையாடிய ராகுல்

**புதுடெல்லி, மார்ச் 10:**



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (மார்ச் 8), காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேரளா மாணவர்களுடன் கலந்துரையாடிய வீடியோவை நேற்று வெளியிட்டார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது: "பெண்கள் ஆண்களை விட அதி புத்திசாலிகள். எனது குடும்பத்தில் என் பாட்டிதான் (இந்திரா காந்தி) பாஸ். பெண்கள் தான் குடும்பத்தின் உண்மையான தலைவர்கள் என்பதைப் பார்த்து வளர்ந்தவன் நான். எனது குடும்பத்தில் எப்போதும் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும்.

ஆண்களைப் பொருத்தவரையில் எதற்கும் அவசரப்படுபவர்களாகவும், தேவையற்ற விஷயங்களில் கவனத்தைச் சிதறவிடுபவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், பெண்கள் நேரடி அதிகாரத்தைச் செலுத்தாமல், மறைமுக அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதுவே மிகவும் பலனளிக்கக் கூடியதாக இருக்கிறது.

பெண்கள் தங்கள் ஆற்றலை உணர்ந்து செயல்பட்டால், சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவர முடியும். பெண்கள் முன்னேற முழு உரிமை அளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க அதிபர் டிரம்ப கூறுவதை மோடி பின்பற்றுகிறார்: கார்கே

**புதுடெல்லி, மார்ச் 10:**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒரு சர்வாதிகாரி, பிரதமர் நரேந்திர மோடி அவருடைய அடிமை என்று காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

கர்நாடகத்தின் கலபுர்கி மாவட்டத்தில் உள்ள சித்தாபூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ரூ.1,069 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசியதாவது: ஈரான் நாட்டின் உச்ச தலைவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஒரு நாட்டின் தலைவர் கொலை செய்யப்படும்போது, அந்த நாடும் உலகமும் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கும்? நாடுகளின் தலைவர்கள் மிரட்டப்படும்போது, உலகில் அமைதி நிலவாது. அமெரிக்கா சர்வதேச சட்டங்களை மீறி வருகிறது.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா இறக்குமதி செய்யும் அமெரிக்கப் பொருள்களுக்கு வரி விதிக்கப்படாத நிலையில், இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு அந்நாடு வரி விதிக்கும்.

நம் நாட்டில் 65 சதவீத மக்கள் விவசாயத்தைச் சார்ந்துள்ளனர். அமெரிக்காவில் இது 3 சதவீதமாக உள்ளது. டிரம்ப் போன்றவர்களின் நட்பால், நீங்கள் (பிரதமர் மோடி) நம்முடைய நாட்டை அடிமையாக்குகிறீர்கள்; அமெரிக்கா கூறுவதைக் கேட்டு செயல்படுகிறீர்கள்.

ரஷியா, ஈரான், வெனிசுலா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியா கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து வந்தது. எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய குறைந்த விலையில் எங்கு கச்சா எண்ணெய் கிடைக்கிறதோ அங்கு இந்தியா கொள்முதல் செய்தது.


டிரம்ப்பை பிரதமர் மோடி நண்பர் என்று அழைக்கிறார். இந்தியா ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யைக் கொள்முதல் செய்தது. ஆனால், டிரம்ப் கொள்முதல் செய்யக்கூடாது அல்லது வரி விதிப்பேன் என்றார்.

இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷிய கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்ய 30 நாள்களுக்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. டிரம்ப் ஒரு சர்வாதிகாரி. பிரதமர் மோடி அவருடைய சொல்படி கேட்கிறார்.

நாட்டை நிர்வகிக்க மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்தனர். அதை விடுத்து, நாடு முழுவதும் பயணிக்கும் பிரதமர், தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார். நீண்ட காலத்துக்கு காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத சூழலில், அதன் தலைவர்களை குறிவைத்துப் பேசி வருகிறார். நாட்டு மக்களின் கவனத்தை திசைத்திருப்ப அவர் இவ்வாறு செய்கிறார். காங்கிரஸ் கட்டமைத்த நாட்டை, மோடி அழித்து வருகிறார் என்றார் கார்கே.

# கேரளத்தில் 'வந்தே பாரத்' மீது மீண்டும் கல்வீச்சு: ஜன்னல் கண்ணாடிகள் சேதம்; பயணிகள் தப்பினர்

**திருவனந்தபுரம், மார்ச் 10:**



கேரளத்தில் அடையாளம் தெரியாத சமூக விரோதிகள் சிலர் வந்தே பாரத் ரயில் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் ரயில் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தன. அதிருஷ்டவசமாக பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இது தொடர்பாக ரயில்வே காவல் துறையினர் கூறியதாவது: திருவனந்தபுரம்-மங்களூரு இடையிலான வந்தே பாரத், கேரளத்தின் அலுவா-அங்கமாலி ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதியில் சனிக்கிழமை இரவு 7.15 மணியளவில் சென்று கொண்டிருந்தது.

அப்போது, அடையாளம் தெரியாத சமூக விரோதிகள் சிலர் ரயிலை நோக்கி சரமாரியாக கற்களை வீசினர். இதில் ரயில் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. அதிருஷ்டவசமாக பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக ரயிலில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு விசாரணை நடைபெறுகிறது.

சம்பவம் நிகழ்ந்த இடத்தின் அருகே வசிக்கும் மக்களிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மாநில காவல் துறையும் தனியாக விசாரணை நடத்தி வருகிறது என்று தெரிவித்தனர்.

கடந்த மாதம் இதேபோல் வந்தே பாரத் ரயில் மீது கல் வீசியது தொடர்பாக கண்ணூரைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகாவில் ரூ.1,069 கோடி நலத்திட்ட பணிகள்; துவக்கி வைத்த கார்கே

**கலபுரகி, மார்ச் 10:**

கர்நாடகாவின் கலபுரகி மாவட்டத்தில் சித்தப்பூர் நகரில் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவரான கார்கே இன்று ரூ.1,069 கோடி மதிப்பிலான நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டங்களை துவக்கியும் வைத்துள்ளார். இதன்பின்னர் திரளாக கூடியிருந்த கூட்டத்தினரின் முன் உரையாற்றிய அவர், 3 சதவீத இந்தியர்களே அமெரிக்காவை சார்ந்துள்ளனர். 65 சதவீத இந்திய விவசாயிகள் வேளாண்மையை சார்ந்தே உள்ளனர் என கூறினார். ரஷியாவிடம் எண்ணெய் வாங்கினால் வரி விதிப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இந்தியாவுக்கு எதிராக கூறுகிறார். டிரம்ப்பிடம் ஒவ்வொரு நாளும் நான் பேசுகிறேன் என மோடி கூறுகிறார். வரி விதிப்பது பற்றியா அவரிடம் நீங்கள் பேசி கொண்டிருக்கிறீர்கள்? என கார்கே கேட்டுள்ளார்.




# மடப்புரம் அஜித்குமார் மீதான நகை திருட்டு புகார் முடித்து வைப்பு



**மதுரை, மார்ச்.10:** மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீதான நகை திருட்டு புகாரை நீதிமன்றம் முடித்து வைத்தது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளியாக பணிபுரிந்த அஜித்குமார் மீது கடந்த ஆண்டு ஜூன் 27-ம் தேதி நிகிதா என்பவர் நகை திருட்டு புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் காவலாளி அஜித்குமாரை அழைத்து வந்து தனிப்படை காவலர்கள் விசாரணை நடத்தினர். மேலும், காவலர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார்.

இச்சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், காவல் மரண வழக்கு பதிவு செய்த சிபிஐ, வழக்கில் சம்பந்தப்பட்ட தனிப்படை காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன், ஓட்டுநர் ராமச்சந்திரன் ஆகியோரை கைது செய்தது.

மேலும், சிபிஐ தாக்கல் செய்த கூடுதல் குற்றப் பத்திரிக்கையில் அஜித்குமார் கொலை சம்பவத்தன்று பணியில் இருந்த மானாமதுரை சரக டிஎஸ்பி சண்முக சுந்தரம் மற்றும் திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் ரமேஷ் குமார் மற்றும் சார்பு ஆய்வாளர் சிவக்குமார், தலைமை காவலர் இளைய ராஜா ஆகிய 4 பேரின் பெயர்கள் சேர்க்கபட்டது.

தொடர்ந்து, இந்த வழக்கில் நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை விசாரிக்க சிபிஐ தரப்பில் மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, நீதிமன்றத்தில் ஆஜரான நிகிதாவிடம், நகை திருட்டு புகாரை சிபிஐ முடிக்க முடிவு செய்திருப்பது குறித்து கருத்து கேட்கப்பட்டது. அதற்கு நிகிதா ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அது தொடர்பாக எழுத்து பூர்வமாக மனு தாக்கல் செய்ய நிகிதாவுக்கு உத்தரவிடபட்டது. இந்த வழக்கு மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நிகிதா நேரில் ஆஜராகி எழுத்து பூர்வ மனு தாக்கல் செய்தார்.

திருடு போனதாக கூறப்படும் நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே நகை திருட்டு வழக்கை முடித்து வைக்கிறோம் என சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு நிகிதா சம்மதம் தெரிவித்ததன் பேரில் நகை திருட்டு புகாரை நீதிமன்றம் முடித்து வைத்தது.

# மாற்றுத் திறனாளியிடமிருந்து செல்போனை திருடி நூதன முறையில் 'ஜிபே' மூலம் மகனிடம் பணம் பறித்த இளைஞர் கைது



**சென்னை, மார்ச்.10:** மாற்றுத் திறனாளியிடமிருந்து செல்போனை திருடி,'ஜிபே' மூலம் அவரது மகனிடம் பணம் பறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். ராணிப்பேட்டை மாவட்டம், பானாவரம் பகுதியைச் சேர்ந்தவர் காதர்பாஷா (65). மாற்றுத் திறனாளியான இவர், ரமலான் மாதம் என்பதால் சென்னை, பெரியமேடு பகுதியில் உள்ள மசூதியில் தங்கியுள்ளார். இவர் கடந்த 5-ம் தேதி மதியம் பெரியமேடு மசூதிக்கு அருகே மூன்று சக்கர வாகனத்தில் அமர்ந்து செல்போனை பார்த்துக் கொண்டிருந்தார்.

செல்போன் இரவல்

அப்போது, அங்கு வந்த இளைஞர் ஒருவர் காதர்பாஷாவிடம், 'என் செல்போன் சுவிட்ச்-ஆப் ஆகிவிட்டது. ஒரு போன் செய்துவிட்டு தருகிறேன்' எனக் கேட்டார். பரிதாபப்பட்ட காதர் பாஷா தனது செல்போனை அவரிடம் கொடுத்தார்.

மேலும் சிறிது நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது அந்த நபர், காதர்பாஷா நலனின் அக்கறை உள்ளது போல் பேசி, அவரது மகனின் செல்போன் எண்ணை பெற்றுக் கொண்டதோடு, இன்னொரு போன் செய்துவிட்டு தருகிறேன் எனக்கூறி செல்போனில் பேசியபடியே பைக்கில் அங்கிருந்து தப்பினார்.

விபத்து என பொய்

பின்னர் சிறிது நேரத்தில் அந்த நபர் காதர்பாஷாவின் மகனின் செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு, 'விபத்தில் உனது தந்தை சிக்கிக் கொண்டார்.

அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறேன். சிகிச்சை செலவுக்கு உடனடியாக பணத்தை அனுப்பி வைக்கவும்' எனக்கூறி ஜிபே மூலம் ரூ.3.500-ஐ பெற்றுக் கொண்டார்.

சிறையில் அடைப்பு

அதன்பிறகு தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்த காதர்பாஷாவின் மகன், இது தொடர்பாக தனது தந்தையிடம் தெரிவித்தார். பின்னர் இந்த விவகாரம் தொடர்பாக பெரியமேடு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்ததில் செல்போனை திருடிச் சென்றதோடு, ஜிபே மூலம் பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டது ஆவடியைச் சேர்ந்த சமீர்பாஷா (28) என்பது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர். பின்னர் அவரை சிறையில் அடைத்தனர்.

# மருதமலை முருகன் கோவிலில் அமலுக்கு வரும் கட்டுப்பாடு... பக்தர்களின் கவனத்திற்கு!



**கோவை, மார்ச்.10:** கோவை மருதமலையில் பிரசித்தி பெற்ற சுப்பிரமணிய சுவாமி கோவில் உள்ளது. இந்த கோவில் பக்தர்களால் 7-ம் படைவீடு என அழைக்கப்படுகிறது.

இந்த கோவிலுக்கு கோவை மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்தும் அதிகளவிலான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கிறார்கள்.

குறிப்பாக விசேஷ நாட்களில் மருதமலை முருகன் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். பக்தர்கள் மலைப்பாதை வழியாக வாகனங்களிலும், படிக்கட்டுகள் வழியாகவும் மலைக்கோவிலுக்கு சென்று வருகின்றனர்.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் சாமி தரிசனம் செய்து விட்டு, கோவில் முன்புள்ள கொடிமரம், ராஜகோபுரம் முன்பு நின்று புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்து செல்வர்.

இந்த நிலையில் மருதமலை முருகன் கோவிலில் நாளை முதல் செல்போன் பயன்படுத்தவும், புகைப்படம் எடுக்கவும் தடைவிதிக்கப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:-

மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மார்ச் 10-ந் தேதி(நாளை) முதல் ராஜகோபுரம் நுழைவு வாயிலில் இருந்து ஆதிமூலவர் சன்னதி, சுப்பிரமணியசுவாமி சன்னதி, பாம்பாட்டி சித்தர் சன்னதி உள்பட அனைத்து சுவாமி சன்னதிகள் மற்றும் கோவில் வளாகத்திற்குள் செல்போன் பேசவும், புகைப்படம் எடுக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே பக்தர்கள் அனைவரும் கோவில் ராஜகோபுரம் நுழைவு வாயிலில் நுழைவதற்கு முன்பு தங்களது செல்போனை சுவிட்ச் ஆப் செய்து விட்டு அமைதியான முறையில் சுவாமி தரிசணம் செய்ய ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் கோவிலில் பக்தர்கள் பயன்படுத்துவதற்காக லிப்ட் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் பயணித்து பக்தர்கள் மலைக்கோவிலுக்கு சென்று தரிசனம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் லிப்ட்டில் பயணிக்க கோவில் நிர்வாகம் நேற்றுமுதல் கட்டணம் நிர்ணயம் செய்துள்ளது.

அதன்படி லிப்ட்டில் பயணிக்க பக்தர் ஒருவருக்கு ரூ.30 கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# பரங்கிமலை- வேளச்சேரி இடையே இன்று

## அதிகாரிகள் கொடுத்த அப்டேட்



**சென்னை, மார்ச்.10:** சென்னை எழும்பூர் ரெயில் நிலைய மறுசீரமைப்பு பணி காரணமாக கடந்த மாதம் 20-ந்தேதி முதல் மின்சார ரெயில் சேவைகள் குறைக்கப்பட்டு இயக்கப்படுகிறது. இதனால் பயணிகள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இதற்கு ரெயில்வே நிர்வாகம் சார்பில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதில் மிக முக்கியமாக வேளச்சேரி-பரங்கிமலை இடையே பறக்கும் ரெயில் சேவையை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி நாளை (10-ந் தேதி) முதல் அந்த வழித்தடத்தில் ரெயில் சேவை தொடங்க இருப்பதாகவும் இதற்கு இடையே ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் பாதுகாப்பு சோதனை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், வேளச்சேரி-பரங்கிமலை வழித்தடத்தில் கடந்த 5-ந்தேதி டெல்லியில் இருந்து ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஜனக்குமார் கர்க் தலைமையில் வந்த குழுவினர் ரெயிலை இயக்கியும், டிராலிகளில் பயணித்தும் தண்டவாளப் பாதுகாப்பு நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து, பாதுகாப்பு சான்றிதழ் வழங்கப்பட்டதும் இந்த வழித்தடத்தில் ரெயில் சேவை தொடங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், தற்போது இந்த வழித்தடத்தில் தண்டவாளப் பாதுகாப்பு பரிசோதனை முடிந்த நிலையில், ரெயில் இயக்க அனுமதிச்சான்று கிடைக்கவில்லை எனவும் தண்டவாளத்தில் சில பணிகள் மேற்கொள்ளவேண்டும் என பரிசோதனைக்கு வந்த குழுவினர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது. அந்த பணிகள் முடிவடைந்த பின் பரங்கிமலை-வேளச்சேரி இடையே பறக்கும் ரெயில் சேவை தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காதல் திருமணங்கள் பெற்றோர் எதிர்ப்பால் போக்சோ வழக்குகளாக மாறுவது அதிகரிப்பு: உயர் நீதிமன்றம் கவலை

**மதுரை, மார்ச்.10:** காதல் திருமணங்கள் பெற்றோர் எதிர்ப்பால் போக்சோ வழக்குகளாக மாறுவது அதிகரித்துள்ளதாகவும், இதனால் இளைஞர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்க நேரிடுவதும் கவலை அளிப்பதாக, உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம்,நாகர்கோவிலைச் சேர்ந்த மகேஷ் என்பவர். தனது நண்பரின் சகோதரியை காதலித்து திருமணம் செய்துகொண்டார். அப்போது, அவருக்கு வயது 16 என்பதால், மகேஷ் மீது நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த 2018 மார்ச் 4ம் தேதி காலை வீட்டை விட்டு வெளியேறிய அந்த பெண். மகேஷுடன் அவரது உறவினர் வீட்டுக்குச் சென்று திருமணம் செய்துகொண்டதாகவும், அதன்பின் அவர் பலமுறை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாகவும் 'குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து மகேஷை கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நாகர்கோவில் போக்சோ சிறப்பு நீதிமன்றம், மகேஷுக்கு 20 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து மகேஷ். உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி மாலா அளித்த தீர்ப்பு: பாதிக்கப்பட்ட பெண்ணின் வயதை நிரூபிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட பிறப்பு சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ் ஆகியவை அசல் ஆவணங்களாக அல்லாமல் நகல்களாக உள்ளன. அசல் ஆவணங்கள் இருந்தும் தாக்கல் செய்யப்படாத நிலையில், அவற்றை ஆதாரமாக ஏற்க முடியாது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வயது நிரூபிக்கப்படாத நிலையில், போக்சோ சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. அதனடிப்படையில், கீழமை நீதிமன்றம் வழங்கிய தண்டனை ரத்து செய்யப்படுகிறது. அவர் வேறு எந்த வழக்கிலும் தேவைப்படாவிட்டால், உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இளம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு இடையிலான ஒப்புதல் காதல் திருமணங்கள். பெற்றோரின் எதிர்ப்பால் பின்னர் போக்சோ வழக்குகளாக மாறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற வழக்குகளில் இளைஞர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்க நேரிடுவது கவலை அளிக்கிறது.

போக்சோ சட்டம் குறித்து பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த உத்தரவுகளை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, தமிழக அரசின் முதன்மைச் செயலர் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கை ஜூன் 3-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

# கூடலூர் அருகே காட்டு யானை தாக்கி 2 பேர் பலி



**ஊட்டி, மார்ச்.10:** நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் தேவர்சோலை அருகே காரக்குன்னுவை சேர்ந்தவர்கள் ரவி(60), லிங்கன். இவர்கள் 2 பேரும் வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்காக நேற்று தேவர்சோலை டவுனுக்கு சென்றனர்.

அங்கு சென்று வீட்டிற்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் வாங்கி கொண்டு மீண்டும் காரக்குன்னு நோக்கி வந்தனர்.

நேற்றிரவு 8.30 மணிக்கு காரக்குன்னு அருகே உள்ள தேயிலை எஸ்டேட் அருகே 2 பேரும் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது வனத்தை விட்டு வெளியேறிய ஒற்றை காட்டு யானை குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து நடமாடி கொண்டிருந்தது.

யானை நிற்பது அறியாமல் 2 பேரும் சென்று கொண்டிருந்தனர். இந்த நிலையில் குடியிருப்பின் அருகே உள்ள தேயிலை எஸ்டேட் பகுதியில் இவர்கள் சென்ற போது இவர்களை யானை வழிமறித்து நின்றது.

யானை நிற்பதை பார்த்ததும் 2 பேரும் அங்கிருந்து தப்பியோட முயன்றனர். ஆனால் அதற்குள்ளாகவே யானை 2 பேரையும் தூக்கி வீசி தாக்கியது.

இதில் 2 பேரும் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டனர்.

குடியிருப்பில் இருந்து கொஞ்சம் தூரம் தள்ளி இவர்கள் இறந்து கிடந்த பகுதி இருந்ததாலும், இரவு நேரம் என்பதாலும் இவர்கள் இறந்த விவரம் யாருக்கும் தெரியவில்லை.

இன்று அதிகாலை தேயிலை தோட்ட தொழிலாளர்கள் வேலைக்காக தேயிலை தோட்டத்திற்கு வந்தனர்.

அப்போது அங்கு 2 பேரும் இறந்து கிடப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் அங்கு திரண்டு விட்டனர். மேலும் இதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தகவல் அறிந்ததும் வனத்துறையினர், போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

பின்னர் உயிரிழந்தவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் ஏராளமான மக்கள் திரண்டு உடலை எடுக்கவிடவில்லை. அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

யானை தாக்கி 2 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அத்துடன் யானை தாக்கி 2 பேர் இறந்ததால் அப்பகுதி பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். குடியிருப்பு அருகே நடமாடும் யானையை அடர் வனத்திற்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவை வெள்ளியங்கிரி மலையேறிய தங்கபட்டறை தொழிலாளி உயிரிழப்பு

**பேரூர், மார்ச்.10:** கோவை கெம்பட்டி காலனியை சேர்ந்தவர் ஹரிதாஸ்(வயது48). தங்கபட்டறை தொழிலாளி. சிவபக்தரான இவர் கோவை பூண்டி வெள்ளியங்கிரி மலையேறுவதற்கு முடிவு செய்தார்.

அதன்படி கடந்த 7-ந்தேதி ஹரிதாஸ் தனது நண்பரான மாரியப்பன் என்பவருடன் பூண்டி வெள்ளியங்கிரி மலையடிவாரத்திற்கு சென்றார். அங்கு கீழ் உள்ள பூண்டி வெள்ளியங்கிரி கோவிலில் சாமி தரிசனம் செய்து விட்டு, இருவரும் மலையேறினர்.

முதல் மலையில் சென்று கொண்டிருந்த போது ஹரிதாசுக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் அவர் மயங்கி விழுந்தார். இதனால் அதிர்ச்சியான அவரது நண்பர் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தார்.

வனத்துறையினர் விரைந்து வந்து மயங்கி விழுந்த ஹரிதாசை டோலிகட்டி மலையடிவாரத்திற்கு தூக்கி வந்தனர். அங்கு இருந்த மருத்துவகுழுவினர் மயங்கி விழுந்த ஹரிதாசை பரிசோதனை செய்தனர்.

அப்போது ஹரிதாஸ் வரும் வழியிலேயே உயிரிழந்து விட்டது தெரியவந்தது. இதுகுறித்து ஆலாந்துறை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் அறிந்ததும் ஆலாந்துறை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து உயிரிழந்த ஹரிதாசின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜிஎஸ்டி அதிகாரிபோல் நடித்து 1.5 கிலோ தங்க நகைகளை பறித்துச் சென்ற வழக்கில் மேலும் ஒருவர் ராஜஸ்தானில் கைது

**சென்னை, மார்ச்.10:** ஜிஎஸ்டி அதிகாரி போல் நடித்து, 1.5 கிலோ தங்க நகை பார்சல்களை ஏமாற்றி எடுத்துச் சென்ற வழக்கில் தலைமறைவாக இருந்த மேலும் ஒருவர் ராஜஸ்தானில் கைது செய்யப்பட்டார்.

சென்னை, சவுகார்பேட்டை, பெரியநாயக்கன் தெருவைச் சேர்ந்தவர் ராவல்சிங் (30)கூரியர் நிறுவனம் நடத்தி வருகிறார்.

கடந்த 6-ம் தேதி மீனம்பாக்கம், விமான நிலைய கார்கோ வில் வந்த இவர்களது கூரியர் நிறுவனத்தின் பார்சல்களில் 1.5 கிலோ தங்க நகைகள் அடங்கிய குறிப்பிட்ட சில பார்சல்களை மட்டும் எடுத்து வர, இவரது நிறுவனத்தில் வேலை செய்து வரும் கோவாராம் மற்றும் அதே கட்டிடத்தில் உள்ள மற்றொரு கூரியர் நிறுவனத்தில் வேலை செய்துவரும் ராஜஸ்தானைச் சேர்ந்த ஜித்தேந்தர் குமார் (31) ஆகியோரை பைக்கில் அனுப்பி வைத்தார்.

ஆனால், வெகு நேரமாகியும் அவர்கள் திரும்பி வரவில்லை. இருவரது செல்போனும் சுவிட்ச்-ஆஃப் செய்யப்பட்டது.

சில மணி நேரத்துக்குப் பிறகு ஆட்டோ ஓட்டுநர் ஒருவரின் செல்போனிலிருந்து பேசிய கோவாரம், "நாங்கள் இருவரும் தங்க நகைகள் அடங்கிய பார்சல்களை எடுத்துக் கொண்டு பைக்கில் திரும்ப வரும் வழியில், கிண்டி மேம்பாலம் அருகே 2 பேர் எங்களை வழிமறித்து, செங்கல்பட்டு ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகள் எனக்கூறி எங்களிடமிருந்த பார்சல்களையும், செல்போன்களையும் வாங்கிக் கொண்டு, எங்கள் இருவரையும் ஆட்டோவில் அழைத்துச் சென்று பெருங்களத்தூர் அருகே இறக்கி விட்டு சென்றுவிட்டனர்" என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக, கிண்டி காவல் நிலையத்தில் ராவல் சிங் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பார்சலை எடுத்துச் சென்ற ஊழியர்களில் ஜித்தேந்தர்குமார் தனது சொந்த மாநிலமான ராஜஸ்தானிலிருந்து நண்பர்களை சென்னைக்கு வரவழைத்து, திட்டம் தீட்டி ஜிஎஸ்டி அதிகாரிகள் போல நடிக்க வைத்து தங்க நகை பார்சல்களுடன் சொந்த ஊருக்கு தப்பிச் சென்றது தெரிந்தது.

இதையடுத்து, ஜித்தேந்தர் குமார் கடந்த மாதம் 20-ம் தேதி கைது செய்யப்பட்டார். தலைமறைவாக இருந்த அவரது கூட்டாளியான குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த ராம் ரகுநாத் (39) ராஜஸ்தானில் பதுங்கி இருந்த போது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில், தொடர்புடைய மேலும் சிலரை போலீஸார் தேடி வருகின்றனர்.



புஷ்கர் ஸ்ரீராம வைகுண்டநாதர் சன்னதி பிரம்மோத்ஸவம் நாள் 2 மாலை சூர்ய பிரபை வாகனம் புறப்பாடு.




மேற்கு மாம்பலம் - ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீ செங்கமலவல்லி நாயிகா ஸமேத சென்ன ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம். இரண்டாம் நாள் மாலை பஂரீ பெருமாள்- சூர்யப்பிரபை புறப்பாடு.

# ரூபாய் 20 லட்சம் நோன்புப் பெருநாள் உதவிகள்




**இராமநாதபுரம், மார்ச்.10:** இராமநாதபுரம் மத்திய மாவட்டம் தமுமுக சார்பாக வருடம் தோறும் நோன்பு பெருநாள் உதவிகள் எளியோர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அதனைத் தொடர்ந்து இந்த வருடம் இன்று மாவட்ட அலுவலகத்தில்.. தமுமுக மாநில பொது செயலாளர் பேராசிரியர் ஜெ.ஹாஜாகனி அவர்கள் கலந்து கொண்டு ரூபாய் 20 லட்சம் நோன்பு பெருநாள் உதவிகள் தேவையுடைய மக்களுக்கு உதவி செய்யும் அடிப்படையில் சிறு தொழில் உதவியாக 110 பேருக்கு ரூபாய் 13 லட்சம் ஆயிரம் பேருக்கு ரூபாய் 4 லட்சம் மதிப்பில் புத்தாடைகளும் மூன்று லட்சம் மதிப்பில் உணவுப் பொருட்களும் வழங்கினர்.

நிகழ்வில்... தமுமுக மாநில துணை பொது செயலாளர் எஸ்.சலிமுல்லாஹ்கான், மாவட்ட தலைவர் பிரிமியர் இப்ராஹிம், மாவட்ட செயலாளர் அப்துல் ரஹீம், மாவட்ட துணை செயலாளர் காதர் பிச்சை MC வர்த்தக அணி துணை செயலாளர் பரகத்துல்லா மற்றும் நகர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




பங்குனி ப்ரும்மோத்ஸவ முதல் திருநாள் இரவு பேரிதாடகம், ருக்மினி ஸத்யபாமா ஸமேதராய் ஸ்ரீ பெருமாள் கல்யாண அவசர திருக்கோலம் தங்க திருச்சிவிகையில் புறப்பாடு, கொடிச்சப்பரம்.

# சென்னையில் நாளை 93 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாக வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

**சென்னை, மார்ச்.10:** சென்னையில் நாளை அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 75 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நீலகிரி மாவட்டம் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளை (மார்ச் 9) மிக லேசான மழை பெய்யக்கூடும். மார்ச் 10-ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்களிலும், 11, 12 தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும், 13, 14 தேதிகளில் தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுச்சேரி பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் மிக லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 75 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கோவை பேருந்து நிலையத்தில் நடனமாடிய யூடியூபருக்கு சம்மன்!



**கோவை, மார்ச்.10:** காந்திபுரம் பேருந்து நிலையத்தில் பயணிகள் கூடி இருந்த பகுதியில் சினிமா பாடலுக்கு நடனமாடி விடியோ பதிவிட்டு கேரள யூடியூபருக்கு போலீஸார் சம்மன் அனுப்பினர்.

கோவை, காந்திபுரம் பேருந்து நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. அங்குக் கேரள மாநிலத்தைச் சேர்ந்த யூடியூபர் ஜித்து சாஜி என்பவர் ஒரு விடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார்.

அதில் ஒரு இளைஞர் சேலை அணிந்து பேருந்து நிலையத்திற்குள் நடனம் ஆடுவதும், இரண்டு இளைஞர்கள் பயணிகள் காத்திருப்பு பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் அருகில் நடனமாடும் காட்சியும் இடம்பெற்று இருந்தது. அந்த விடியோ வைரலானது மக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையத்தில் எந்த அனுமதி இன்றி விடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

மேலும், இதுபோன்ற செயல்களை காவல் துறையினர் தடுக்காமல் விட்டது, குறித்தும் விமர்சனம் கருத்துக்களைப் பலர் பதிவிட்டனர். அதோடு பேருந்து நிலையத்தில் பயணிகள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக ஏற்படுத்தும் வகையில் செயல்படுபவர்கள் மீது போலீஸார் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அந்த விடியோவில் பள்ளி குழந்தைகள் மற்றும் பெண்கள் முகங்களை அவர்கள் அனுமதியின்றி காட்டி திருத்தம் செய்து பதிவேற்றி உள்ளனர். அதை நீக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து காட்டூர் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். இந்த சம்பவம் தொடர்பாக போலீஸ் அதிகாரிகள் கூறும்போது,

பேருந்து நிலையத்தில் நடனமாடும் விடியோ கேரளாவைச் சேர்ந்த ஜி.எஸ் மோகன் என்ற இன்ஸ்டாகிராம் ஐ.டி யில் இடம்பெற்று உள்ளது. அவர்கள் தமிழ்நாடு, கேரளம் ஆகிய பொது இடங்களில் நடனமாடி பொதுமக்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்தி உள்ளனர். எனவே அவர்களுக்குச் சம்மன் அனுப்பி விசாரணைக்கு அழைத்து உள்ளோம் என்றனர்.

# விஜயை பின்தொடர்ந்ததால் விபத்தில் சிக்கிய இளைஞரை சந்தித்து நலம் விசாரித்தார் அன்பில் மகேஷ்

**தஞ்சாவூர், மார்ச்.10:** தஞ்சாவூரில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் வாகனத்தைப்பின்தொடர்ந்து சென்று, விபத்தில் சிக்கி திருச்சியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், கல்லூரிக்கு செல்வதாகவே கூறிவிட்டு விக்னேஷ் சென்றதாகவும், கல்லூரி தரப்பிலிருந்து தனக்கு எதுவும்தெரிவிக்கப்படவில்லை எனவும் விபத்துக்குள்ளான மாணவனின் தந்தை கண்ணீர்மல்க பேட்டியளித்தார்.



இந்நிலையில், விஜயை பின்தொடர்ந்ததால் விபத்தில் சிக்கி படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இளைஞரை மருத்துவமனையில் சந்தித்து அமைச்சர் அன்பில் மகேஸ் நலம் விசாரித்தார்.

அப்போது அவரது மருத்துவ செலவுகளை ஏற்பதாகவும் அமைச்சர் உறுதி அளித்தார்.

## அரசியல் கார்னர்

# விஜய்க்கு தொடர்கிறதா அரசியல் அழுத்தம்?- இன்று சிபிஐ முன்பு ஆஜராக சம்மன்

**சென்னை, மார்ச்.10:** கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு தொடர்பாக, தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் 2 முறை டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜரானார்.

மேலும் இவ்வழக்கு தொடர்பாக த.வெ.க. நிர்வாகிகளான புஸ்சி ஆனந்த், நிர்மல் குமார், ஆதவ் அர்ஜூனா உள்ளிட்ட நிர்வாகிகளும் சி.பி.ஐ. முன்பு ஆஜராகி உள்ளனர்.

இந்த நிலையில், கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக நாளை ஆஜராக தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய்க்கு மீண்டும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இதனிடையே, விஜய் நடித்த 'ஜன நாயகன்' படத்தை இன்று மறுதணிக்கை செய்யப்படும் என அறிவித்த நிலையில், கமிட்டி உறுப்பினர்களில் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாததால் படம் பார்ப்பது ஒத்திவைக்கப்பட்டது. மேலும் அ.தி.மு.க. கூட்டணியில் விஜய் இணைய வேண்டும் என அழுத்தம் தரப்படுவதாக அரசியல் வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது. இதற்கிடையே கரூர் வழக்கிற்காக நாளை சி.பி.ஐ. முன் விஜய் ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்டுள்ளதும் அரசியல் அழுத்தமே என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# "மக்களை ஏமாற்றிய திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது" - பழனிசாமி ஆவேசம்



**சென்னை, மார்ச்.10:** மக்களை ஏமாற்றிய திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது, என பெருந்துறையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி பேசினார்.

சட்டப்பேரவை தொகுதி வாரியாக, அதிமுக சார்பில் 'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சாரக் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில்,

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பங்கேற்றுப் பேசியதாவது:

இன்னும் 8 நாட்களில் தேர்தல் அறிவிப்பு வந்துவிடும். அடுத்த மாதம் தேர்தலே வந்துவிடும். பெருந்துறை தொகுதியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின், "அதிமுக-வை பாஜக விழுங்கிவிடும், அதிமுக அழிந்துவிடும்" எனப் பேசியுள்ளார். அதிமுக-வை எந்தக் கொம்பன் நினைத்தாலும் அழிக்க முடியாது. அதே கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேசும்போது, "அதிமுக-வில் மரியாதை இல்லை" என குற்றம்சாட்டியுள்ளார்.

ஜெயலலிதா மறைந்த பிறகு சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நேரத்தில், அதிமுக-வுக்கு எதிராக வாக்களித்தவர் ஓ.பன்னீர்செல்வம். 'கேடு நினைப்பவன் கெடுவான்' என்பதற்கு ஏற்ப அவராகவே வீழ்ந்துவிட்டார். ஜெயலலிதா சிறை சென்றபோது, ஓ.பன்னீர்செல்வத்தை நம்பி முதல்வராக்கினார்.

அவருக்கு அடையாளம் கொடுத்தது அதிமுக. திமுக-வை விரட்ட வேண்டும் என நினைத்து எம்ஜிஆர் உருவாக்கிய அதிமுக-வில் இருந்து வெளியேறி, திமுக-வுடனேயே சேர்ந்துவிட்டார் ஓபிஎஸ். திமுக-வின் 'பி டீம்' ஆக அவர் மாறிவிட்டார். எம்ஜிஆர், ஜெயலலிதாவின் ஆன்மா அவரை விரட்டிவிட்டது. தற்போது அதிமுக தூய்மையான இயக்கமாகிவிட்டது.

சாதாரண தொண்டனும் நன்கு உழைத்தால் அதிமுக-வில் உயர் பதவிக்கு வரலாம். ஓபிஎஸ் புகுந்த கட்சியும் ஆமை புகுந்த வீடும் ஒன்று. சுயநலவாதிகள் இணைந்த திமுக கட்சி அழியும். திமுக-வின் அழிவுக்கு செந்தில்பாலாஜியே காரணமாக இருப்பார். 453 நாட்கள் சிறையில் இருந்த அவர், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள யாரை வேண்டுமானாலும் காட்டிக் கொடுப்பார். எனவே, ஸ்டாலின் திமுக-வை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

பாஜக-வுக்கு அதிமுக அடிமையாக இருப்பதாக ஸ்டாலின் கூறுகிறார். ஆனால் உண்மையில், காங்கிரஸ் கட்சிக்குத் தான் திமுக அடிமையாக உள்ளது. தமிழகத்தில் மீண்டும் அதிமுக ஆட்சி அமைப்பதை ஸ்டாலின் பார்ப்பார். அதிமுக ஆட்சிக்கு வந்ததும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2 ஆயிரம், குடும்ப அட்டைக்கு ரூ.10 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.

ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். கூட்டுறவுக் கடன் சங்கத்தில் மாற்றுத்திறனாளிகள் வாங்கிய கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். அம்மா கிளினிக் மீண்டும் திறக்கப்படும்.

கைத்தறிக்கு தற்போது மாதம் 300 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்கப்படுகிறது. அதிமுக ஆட்சிக்கு வந்ததும் 450 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்கப்படும். அதேபோல விசைத்தறிக்கு தற்போது மாதம் 1,000 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்கப்படும் நிலையில், அதிமுக ஆட்சிக்கு வந்ததும் 1,400 யூனிட்டாக வழங்கப்படும்.

பெருந்துறை பகுதியில் சிப்காட்டில் இருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களை ஏமாற்றிய திமுக ஆட்சி மீண்டும் வரக்கூடாது என்பதே மக்களின் எண்ணம். எனவே, இங்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com